RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 09 பெப்ரவரி 2024 இதழ்:- 37

# ஈழநாடு


பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

# தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் விவகாரத்தில் இணக்கம் எட்டப்பட்டது



தமிழ் அரசு கட்சியின் பொதுச் செயலாளர் பதவி தொடர்பில் இணக்கம் எட்டப்பட்டு ள்ளதாக அறிய வருகின்றது. இதன்படி, திருகோணமலை மாவட்டத்துக்கு ஒரு வருடமும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒரு வருடமும் பொதுச் செயலர் பதவி வழங்கப்படும் என்று தமிழ் அரசு கட்சியின் தலைமைக்கு நெருக்கமான வட்டாரங்கள் ஈழநாடுக்கு தெரிவித்தன. (7ம் பக்கம் பார்க்க

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife

# தமிழரசுக்கட்சிக்குள் சுமந்திரனின் தோல்வி எவ்வாறு நிகழ்ந்தது?



இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவிற்கான போட்டியில் சிவஞானம் சிறிதரன் வெற்றி பெற்றதை விடவும் சுமந்திரன் தோல்வியடைந்ததே பலருக்கும் ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் சுமந்திரன் வெற்றி பெறுவார் என்றே பலரும் எதிர்பார்த்திருந்தனர். சிறிதரனா அல்லது சுமந்திரனா என்றால் ஒருவர் சுமந்திரனை (17ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

ஈழநாடு:- மின்னிதழில் பார்க்க
eelanadu.ca

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக
உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

# சாந்தனை நாட்டுக்குக் கொண்டு வரப்போவது யார்?



சாந்தன் இலங்கை வருவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி சிறிதரனுக்கும் மனோகணேசனுக்கும் கூறியுள்ளார். சனிக்கிழமை நடந்த சந்திப்பில் மேற்கண்டவாறு ரணில் தெரிவித்துள்ளார். தேசிய நல்லிணக்க அரசியலின் மூலமே இது சாத்தியமாகியது (9ம் பக்கம் பார்க்க)

BUY/SELL HOUSES
HOMELIFE HIGHER STANDARDS
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF
# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com
*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

21 Years Real Estate Experience

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N & Conlin Rd


**Oshawa** $269,990
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University

### Corner Par & Dalhousie


**Peterborough** $499,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Great opportunity for investor

### Green Road & Mcbride Ave



**Clarington** $499,888
Bedrooms: 2 Washrooms: 1
lovely corner unit condo

### Hwy 115/Hwy 2/Hwy 401



**Clarington** $1,095,000
Bedrooms: 4 Washrooms: 3
Premium Private Lot!

### Kennedy Rd & Bovaild Dr. E



**Brampton** $1,100,000
Bedrooms: 3 Washrooms: 3
Renovated to separate entrances

### Meadowvale / 401



**Scarborough** $1,698,786
Bedrooms: 4+3 Washrooms: 5
fully fin.basement with sep entrance

### Sharbot & Phillip Murray



**Oshawa** $829,000
Bedrooms: 3+3 Washrooms: 3
Renovated fully with large backyard

### Queen/Beverley



**Toronto** $694,900
Bedrooms: 1 Washrooms: 1
Minutes Walk To Downtown Core

### Brimley/Ellesmere


**Scarborough** $649,900
Bedrooms: 2 Washrooms: 2
Direct Access to STC

### Kennedy/401


**Scarborough** $629,800
Bedrooms: 2 Washrooms: 2
Open concept kitchen, lots of storage

### Church St & Rossland Rd



**Ajax** $3,500
Bedrooms: 3 Washrooms: 3
Close to all amenities

### Morningside & Sheppard



**Scarborough** $3,800
Bedrooms: 4 Washrooms: 3
Close To Ttc, Shopping & 401

*Looking for more house?*

# www.AgentSiva.com
WILL BRING THE BEST RESULTS!

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# போரின் போது காணாமல் ஆக்கப்பட்ட தமிழருக்கு இராணுவமே பொறுப்பு! நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட கந்தசாமி இளரங்கனுக்கான பொறுப்பை இலங்கை ராணுவம் ஏற்க வேண்டும் என வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் புதன்கிழமை (பிப். 07) இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாக மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரத்தினவேல் பிபிசி தெரிவித்தார்.

கந்தசாமி இளரங்கன் என்ற 28 வயதான இளைஞன் ஒருவன்2006ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதி காணாமல் போனதாக அவரது தாய் முறைப்பாடு செய்துள்ளார். வாகன ஓட்டுநரான கந்தசாமி இளரங்கன் ஓமந்தை வழியாக கொழும்பு நோக்கிப் பயணித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், இலங்கை ராணுவத்திற்கும் இடையிலான முக்கிய சோதனைச் சாவடியாக ஓமந்தை சோதனைச் சாவடி அந்தக் காலப் பகுதியில் காணப்பட்டது.

பெரும்பாலான தமிழர்கள் ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்தே காணாமல் ஆக்கப்பட்டதாக இன்றும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர். இந்நிலையில், கந்தசாமி இளரங்கன் பயணி ஒருவரை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விடுவதற்காக வேன் ஒன்றை ஓமந்தை சோதனைச் சாவடி வழியாகச் செலுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டு பகுதியிலிருந்து ராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகை தந்த நிலையில், கந்தசாமி இளரங்கன், அவருடன் பயணித்த பயணி ஆகியோரை ராணுவம் இடைமறித்து சோதனை செய்துள்ளதாக மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரத்தினவேல் தெரிவித்தார்.

ஓமந்தை சோதனைச் சாவடியில் ராணுவம் சோதனை செய்ததன் பின்னர், அவர் தொடர்பான தகவல்கள் எதுவும் கிடையாது. அவர் அந்த வழியாகப் பயணித்தமைக்கான ராணுவப் பதிவு, பதிவுப் புத்தகத்தில் காணப்படுகின்றது. ஆனால், அவர் இத்தனை மணிக்கு வந்தார் என்பது தொடர்பான பதிவு உள்ளது. ஆனால் போனமைக்கான பதிவு இல்லை என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாக மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரத்தினவேல் தெரிவித்தார்.

கடும் கட்டுப்பாடுகள் நிலவிய காலப் பகுதி என்பதால், கந்தசாமி இளரங்கனின் தாயாருக்கு உடனடியாக, அவரது மகனைத் தேட முடியாத நிலைமை அன்று காணப்பட்டுள்ளது. அதன் பின்னரான காலத்தில் தனது மகன் தொடர்பில் போலீசார் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பிடம் ஆராய்ந்துள்ளதுடன், தனது மகன் தொடர்பான எந்த வித தகவல்களையும் அவரால் அப்போது பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இந்த நிலையிலேயே, கந்தசாமி இளரங்கனின் தாய், வவுனியா மேல் நீதிமன்றத்தில் 200ஆம் ஆண்டில் ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்துள்ளதாக, மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரத்தினவேல் குறிப்பிடுகின்றார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக இலங்கை ராணுவ தளபதி, ராணுவத்தின் 211ஆம் படையணியின் கட்டளை தளபதி உள்ளிட்ட மூவர் பெயரிடப்பட்டுள்ளனர். இலங்கை ராணுவத்தால் இந்த மனு மீது ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. அவர் வந்தது உண்மை தான். ஆனால், அப்போதே அவர் சென்று விட்டார் என இலங்கை ராணுவம் ஆட்சேபனை செய்ததாக மூத்த சட்டத்தரணி கூறுகின்றார்.

இவ்வாறான நிலையில், இறுதிக்கட்ட யுத்தம் வலுப் பெற்ற காலகட்டத்தில் மக்கள் இடப்பெயர்வுக்கு உள்ளானதுடன், நீதிமன்ற நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

அதன் பின்னர், யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, கந்தசாமி இளரங்கனின் தாய், 2013ஆம் ஆண்டு இந்த வழக்கை மீள தொடர்வதற்கு மேல் நீதிமன்றத்திடம் அனுமதி கோரியுள்ளார். இதன் பின்னரான காலத்தில் இந்த வழக்கு தொடர்ந்து நடத்தப்பட்டு வந்ததுடன், மனுதாரர் மற்றும் பிரதிவாதிகள் உள்ளிட்ட சந்தேக நபர்கள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் சாட்சியங்களை வழங்கியுள்ளனர்.

கந்தசாமிஇளரங்கன்வந்தது உண்மை. ஆனால், அவர் சென்று விட்டார்' என பிரதிவாதிகள் சாட்சியமளித்த பின்னணியில், அதை கந்தசாமி இளரங்கனின் தாய் நீதிமன்றத்தில் நிராகரித்துள்ளார். அவர் இராணுவத்திடம் இருந்து சென்றிருந்தால், எனக்கு அறிவித்திருப்பார். அவர் அந்த இடத்திலேயே காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்,' என தாய் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

அத்துடன், கந்தசாமி இளரங்கனுடன் வேனில் பயணித்ததாகக் கூறப்படும் இளைஞனான உமாதரன் தொடர்பான தகவல்களும் இல்லை எனக் கூறிய மூத்த சட்டத்தரணி, அவர் தொடர்பில் யாரும் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் (4ம் பக்கம் பார்க்க)

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
**eelanadu.ca**
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## ஒளிவிடும் 26வது ஆண்டில்

மலர்வு
07.06.1932



உதிர்வு
11.02.1998

### அமரர் உயர்திரு குட்டித்தம்பி சண்முகலிங்கம்
### திதி:- 25 ஜனவரி 2024

அன்புள்ள அப்பா!
நீங்கள் மறைந்து போனாலும்
மறையாமல் இருக்கிறது
உங்களின் பாசமும் அன்பும்
வானில் இருக்கும் உங்களிடம்
வேண்டுகின்றோம் வாழ்த்துக்கள்
உங்களின் நினைவுப் பாதையில்
எங்களின் கண்ணீர் மலர்கள்
என்றும் உங்கள் நினைவுகளுடன்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களிடம் கஜன் கோரிக்கை!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களை சந்தித்துள்ளதுடன், தமிழ் மக்களுக்காக, இலங்கை அரசாங்கத்தின் மீது, அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். இந்த சந்திப்புக்கள் தொடர்பில், அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களை சந்தித்து இருந்தேன். இந்த நான்கு பேரும் தமிழர் விவகாரங்களில் தீவிரமாக அக்கறை செலுத்துகிறவர்கள். குறிப்பாக மூவர், 427 என்னும் தீர்மானத்தை, தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியவர்கள். குறிப்பாக நல்லிணக்கத்தையும் பொறுப்பு க்கூறலையும் வலியுறுத்திதான் நிறை வேற்றப்பட்டிருந்தது. அந்த வகையில், அவர்களுடனான சந்திப்பின் போது, முக்கியமாக சில விடயங்களை முன் வைத்திருந்தோம். போர் முடிந்த பிற்பாடு, தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகள் மிக தீவிரமாக அதிகரித்திருக்கின்றது.

ராஜபக்ச தரப்பு, தமிழர்களுக்கு எதிராக, மிக தீவிரமான செயற்பாடுகளில் முன்னர் இறங்கியிருந்தது. ஆனால், இன்றைக்கு ரணில் விக்ரமசிங்க ஆட்சிக் காலத்தில்





இடம் பெறுகின்ற செயற்பாடுகளை பார்த்தால், அது ராஜபக்ச காலத்தில் இடம் பெற்றதை விட மிக மோசமாக அமைந் துள்ளது. தமிழர் தேசத்தை இல்லாதொழிக்கின்ற, தமிழர் தேசத்தின் இருப்பை இல்லாமல் செய்கின்ற செயற்பாடுகளில், அரசாங்கம் இறங்கி இருக்கின்றது. பௌத்த மயமாக்கலாக இருக்கலாம், சிங்கள குடியேற்றங்களாக இருக்கலாம், தமிழருடைய நிலப்பரப்பில் அபிவிருத்தி என்ற பெயரில், சிங்கள குடியேற்றங்களை செய்வதாக இருக்கலாம், நகர அபிவிருத்தி என்ற பெயரில், தமிழர்களை வெளியேற்றுகின்ற செயற்பாடுகளாக இருக்கலாம்.

ஜனநாயக உரிமைகளை மறுத்து, தமிழர்களின் பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரத்தை அவமதித்து, தமிழர்களின் அடிப்படை உரிமையாக இருக்கக் கூடிய, நினைவு கூருவதற்கான உரிமை போன்ற அனைத்து விடயங்களையும் நசுக்கி இன்றைக்கு நிலைமைகள் மோசமடைந்து கொண்டு வருகின்றன. அப்படிப்பட்ட ஒரு நிலையில், இலங்கையில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய 'பூகோள போட்டி நிலை காரணமாக, சீனாவுடன் மேற்கு நாடுகள் போட்டி போடுகிற ஒரு நிலைமை உருவாகியிருக்கக்கூடிய காரணத்தினால், தமிழர்களுடைய விவகாரங்கள் படுமோசமாக இருந்தும் கூட, அந்த விடயங்களில் கவனம் செலுத்தாமல், சீனாவினுடைய ஆதிக்கத்தை கட்டுபடுத்துகிற விடயங்களில், அனுகுமுறையை கடைப்பிடிக்கிற கோணத்தில் தான், மேற்கு நாடுகள் பொதுவாக செயற்பட்டு வருகின்றன.

தாங்கள் அனைவரும், தங்களுடைய அரசாங்கத்திற்கு அழுத்தங்களை செலுத்தி இன்றைக்கு சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடிக்கு, பாரிய நிதி உதவிகள் தேவைப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அந்த உதவிகளை, நிபந்தனை களோடு, விசேஷமாக சிறிலங்கா அரசை மாற்றியமைத்து, தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு, சுயநிர்ணய அடிப்படையில் ஒரு தீர்வு பெற்றுக் கொள்வதற்கான அழுத்தங்களை செலுத்தி, பொறுப்புக் கூறல் என்ற விடயத்தை, சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் ஊடாக நடத்துவ தற்குரிய அழுத்தங்களை, அவர்களுடைய அரசாங்கத்திற்கு கொடுத்து வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்திருந்தோம் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு வாரத்தில் இலங்கைத் துணைத் தூதரகத்திற்கு அழைத்துச் செல்லா விட்டால் மீண்டும் போராட்டம்

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் 7 நாட்களாக ராபர்ட் பயஸ் முன்னெடுத்த உண்ணா விரதப் போராட்டம் அதிகாரிகளின் வாக்குறுதிக்கமைய நிறைவு செய்யப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்ட ராபர்ட் பயஸ் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதால் தொடர்ந்தும் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், ராபர்ட் பயஸ் மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அதனை உடனடியாக நிறைவேற்றுமாறு வலியுறுத்தி கடந்த 31 ஆம் திகதி முதல் உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்து வந்தார்.

சிறப்பு முகாமிலிருந்து தன்னை விடுதலை செய்து விரும்பும் வெளி நாட்டிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும், கடவுச்சீட்டு எடுப்பது தொடர்பாக தன்னை இலங்கை துணைத் தூதரகத்திற்கு அழைத்து செல்ல வேண்டும், சிறப்பு முகாமில் தங்களுக்கு மட்டும் தொடரும் அடிப்படை உரிமைகளுக்கு எதிரான தனிமைச் சிறைவாசம் முடிவுக்கு வர வேண்டும் என்பனவே ராபர்ட் பயஸ் முன்வைத்த கோரிக்கையாக காணப்படுகின்றது.

இந்நிலையில் 7 நாட்களாக தொடர்ந்த



அவரது உண்ணாவிரத போராட்டத்தை உரிய அலுவலர்கள் யாரும் கண்டுக் கொள்ளாமல் காலம் கடத்தி வந்த நிலையில் இதனை கண்டித்து ஏனைய முகாம்வாசிகள் தெரிவித்த எதிர்ப்பினையடுத்து வட்டார சிறப்பு துணை ஆட்சியர் மற்றும் துணை காவல் ஆணையர் ஆகியோர் நேரடியாக சிறப்பு முகாமுக்கு வருகைத் தந்து கோரிக்கைகளை கேட்டறிந்து நடைபயிற்சி உள்ளிட்ட முகாம் சார்ந்த கோரிக்கைகளை உடனடியாக ஏற்பதாகவும்

ஒரு வாரத்தில் இலங்கை துணைத் தூதகரத்திற்கு அழைத்து செல்வதாகவும் கொடுக்கப்பட்ட வாக்குறுதியினைத் தொடர்ந்து இராபர்ட் பயஸ் தற்காலிகமாக தனது உண்ணா நிலைப் போராட்டத்தை நிறைவுக்கு கொண்டு வந்ததாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை ஒருவாரத்தில் இலங்கை துணைத் தூதரகத்திற்கு அழைத்து செல்வதாக கொடுக்கப்பட்ட வாக்குறுதியினை நிறைவேற்றாத பட்சத்தில் மீண்டும் தனது உண்ணாநிலை போராட்டத்தை தொடரப் போவதாகவும் இராபர்ட் பயஸ் தெரிவித்துள்ளார்.

# போரின் போது காணாமல் ஆக்கப்பட்ட தமிழருக்கு

(3ம் பக்கத் தொடர்ச்சி) செய்யவில்லை எனக் குறிப்பிட்டார். இவ்வாறான விடயங்களை ஆராய்ந்ததை அடுத்தே, வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம். இளஞ்செழியன் முக்கிய தீர்ப்பொன்றை வழங்கியுள்ளார்.

மனுதாரர் அளித்த சாட்சியங்களிலும், ஏனைய சாட்சியங்களிலும் இருந்து கந்தசாமி இளரங்கன் அந்த இடத்திற்குப் போயிருக்கிறார். ஆனால், அவர் திரும்பி வரவில்லை. இவர் முற்று முழுதாக ஸ்ரீலங்கா ராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருந்துள்ளார். கடைசியாக அவர் ராணுவத்தின் பொறுப்பிலேயே இருந்துள்ளார். எனவே, இராணுவமே பதிலளிக்க வேண்டும். அவர்களே பொறுப்பேற்க வேண்டும்,' என வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் தீர்ப்பு வழங்கியுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பிலான மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரத்தினவேல் தெரிவித்தார். சர்வதேச சட்டங்கள், இலங்கை நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புகள், வெளிநாட்டு நீதிமன்ற தீர்ப்புகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சட்டங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தே இந்தச் சம்பவத்திற்கு இலங்கை இராணுவம் பொறுப்பேற்க வேண்டும் என்ற தீர்ப்பை நீதிபதி வழங்கியுள்ளார் என அவர் குறிப்பிடுகின்றார்.

எதிர்வரும் ஜுன் 3ஆம் தேதி அல்லது அதற்கு முன்னரான ஒரு தேதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட கந்தசாமி இளரங்கனை, உயிருடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் என வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன், இலங்கை இராணுவத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். அது தவறும் பட்சத்தில், இலங்கை இராணுவம் கந்தசாமி இளரங்கனை வலிந்து காணாமல் ஆக்கியதாக தீர்மானித்து, அதற்கு நட்டஈடாக மனுதாரருக்கு மூன்று பிரதிவாதிகளும் கூட்டாக ஒரு மில்லியன் ரூபாவை வழங்க வேண்டும் எனவும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள பகுதிகளில் இவ்வாறான தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், தமிழர் பகுதியில் இதுவே முதல் முறை. ஆட்கொணர்வு மனு மீதான வழக்கில் தண்டனை கொடுப்பதற்கான அதிகாரம் கிடையாது. ஏனென்றால், இது சிவில் வழக்கு. நஷ்ட ஈடு மட்டும்தான் கொடுக்கச் சொல்லலாம்,' என மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரத்தினவேல் குறிப்பிட்டார்.

இந்தத் தீர்ப்பு தொடர்பில் இலங்கை ராணுவத்தின் சட்டப்பிரிவு சார்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை ராணுவம், தெரிவித்தது. இந்த வழக்கில் காணாமல் போன நபர் இருப்பாராயின், எதிர் வரும் ஜீன் 3ஆம் தேதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு நீதிமன்றம் கூறியுள்ளது.

அவ்வாறு இல்லையென்றால், மனுதாரருக்கு ஜீன் 3ஆம் தேதி ஆகும் போது ஒரு மில்லியன் ரூபா செலுத்துமாறு நீதிமன்றம் கூறியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எமது சட்டப் பிரிவு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. இந்த விடயம் தொடர்பில் இதற்கு மேல் தாம் கூறுவது சிரமமான விடயமாகும்,' என, இலங்கை ராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத் கூறினார்.- நன்றி:- பிபிசி

# சாந்தன் நாடு திரும்புவதற்கு அரசு பச்சைக் கொடி



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ரஜீவ்காந்தி கொலை வழக்கில் நீண்ட காலம் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த நிலையில், அண்மையில் விடுதலை செய்யப்பட்ட சாந்தன் எனப்படும் தில்லையம்பலம் சுதேச்திரராசா என்பவர் மீண்டும் நாடு திரும்புவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் 06 பெப் 2024 செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது சாந்தன் இலங்கை திரும்புவதற்காக முன் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் இது தொடர்பில் கடந்த நாட்களில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்முடன் பேசியிருந்தனர். இவ்விடயத்தில் பாதுகாப்பு அமைச்சின் சார்பில் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாததால் அவர் நாட்டுக்கு வர முடியும் எனத் தீர்மானம் திங்கட்கிழமை எடுக்கப்பட்டது. எனவே இது குறித்து பிரதி உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடி அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கூறலாம். அவர் நாட்டுக்கு வருவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. இதற்குப் பிரத்தியேகமாக அனுமதி வழங்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவரிடம் கடவுச்சீட்டு இருந்தால் அவரால் நாட்டுக்கு வர முடியும்.

அவர் மீது நாட்டில் ஏதாவது குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராயப்பட்டது. ஆனால் அவ்வாறு எதுவும் இல்லை. எனவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் நாடு திரும்ப முடியும் என்றார்.

இதேவேளை முன்னாள் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு விடுதலையானவர்களுள் ஒருவரான சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு சம்மதம் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளார். குறித்த விடயம் தொடர்பாக திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த நிலையிலேயே ஜனாதிபதியினால் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அரசியலுக்குள் மீண்டும் கோத்தபாயா?

நாட்டு மக்களின் அமோக வாக்குகளினாலேயே நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டேன். சிலரின் கோமாளித்தனமான செயற்பாடுகளால் தான் ஜனாதிபதிப் பதவியில் இருந்து நானாகவே விலகியிருந்தேன். மக்களின் ஆதரவு இன்னமும் எனக்கு இருக்கின்றது. எனினும், ஓய்வு நிலையில் இருக்கும் நான் மீண்டும் அரசியலுக்கு வருவது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆண்டு. அதனால் புதிய கூட்டணிகள் தொடர்பான அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்தக் கூட்டணிகள் தொடர்பில் சிலர் என்னுடனும் பேசியுள்ளனர். எனினும், எந்தக் கூட்டணியுடனும் இணைவது தொடர்பில் நான் முடிவு எடுக்கவில்லை.

நாட்டின் சமகால அரசியல் நிலவரத்தை நான் உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன். பலத்த



சவாலுக்கு மத்தியில் நாட்டின் முன்னேற்றத்துக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அயராது பாடுபடுகின்றார். இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றே தீரவேண்டும். அதை ஒத்திவைக்கும் எண்ணம் எவருக்கும் இருக்கக்கூடாது என்றார்.

# கனடாவில் இருந்து சென்ற தாயின் முன்னாள் காதலனால் 15வயது மகள் கர்ப்பம்

யாழ்ப்பாணம் – தென்மராட்சி பிரதேசத்தில் தாயுடன் தகாத உறவு வைத்திருந்த நபரால், 15 வயது பாடசாலை மாணவி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு கர்ப்பமடைந்துள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் வங்கி ஊழியர் என்றும், திருமணத்திற்கு முன்பிருந்தே குறித்த நபருடன் தொடர்பு வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் குறித்த நபர் வேறொரு பெண்ணை திருமணம் செய்து கனடா சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற போது இந்த பெண்ணுடன் மீண்டும் தொடர்பை வைத்திருந்ததால், பெண்ணின் கணவன் அவரை விட்டு பிரிந்து சென்றதாகவும் கூறப்படுகின்றது. குறித்த நபர், சிறுமியின் தாயாருடன் தகாத உறவை ஏற்படுத்திக் கொண்டு அதே வீட்டில் வசித்து வந்துள்ளார்.

சிறுமியின் தாயார் வேலைக்குச் சென்ற பின்னர் அவர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்துள்ளார். இந்நிலையில், குறித்த சிறுமி சுகவீனமுற்றமையால் மருத்துவ



மனைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார். சிறுமியை பரிசோதித்த வைத்தியர்கள், அவர் மூன்று மாதம் கருவுற்று இருப்பதாக தெரிவித்துள்ளனர். சிறுமி வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் வைத்தியர்களினால் பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

# அநுரகுமாரவின் இந்திய விஜயம்



ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவின் இந்திய விஜயம் அதிக கவனிப்பைப் பெற்றிருக்கின்றது. ஜே. வி. பி. அடிப்படையில் இந்திய எதிர்ப்பு கட்சியாக அடையாளம் காணப்பட்ட கட்சி.

1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்த கட்சி எனினும், அண்மைக் காலமாக தங்களின் அணுகுமுறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதான ஒரு தோற்றத்தை அந்தக் கட்சி காண்பித்து வருகின்றது.

அதிகாரத்திற்கு வர வேண்டுமென்றால் மாற்றங்கள் தவிர்க்க முடியாதது – என்பதை அவர்கள் உணர்ந்தும் இருக்காலம். எனினும், ஜே. வி. பியின் இந்திய விஜயம் ஒரு செய்தியை உறுதிப்படுத்துகின்றது. அதாவது, இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் அதிக முக்கியத்துவத்தை பெற்றிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் தான் ஜே. வி. பியின் தலைவரது இந்திய விஜயம் இடம்பெற்றிருக்கின்றது. பெரும் பொருளாதார நெருக்கடி, அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சி ஆகியவற்றால் இலங்கைத் தீவின் அரசியல் ஒழுங்கு நிலை, பெருமளவில் குழம்பியிருக்கின்றது. பாரம்பரிய கட்சிகளின் செல்வாக்கு ஒப்பீட்டு அடிப்படையில் வீழ்சியுற்றிருக்கின்றது. சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் புதியவர்களை தேடும் போக்கு அதிகரித்திருக்கின்றது. அண்மைக்கால கருத்துக் கணிப்புகளும் அவ்வாறான தகவலையே வெளிப்படுத்துகின்றது.

எந்தவொரு கட்சியும் ஐம்பது விகித ஆதரவைப் பெற முடியாத நிலையிருப்பதாகக் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. இந்தப் பின்புலத்தில் தான் அதிகாரத்தில் ஒரு போதுமே இருந்திராத, ஜே.வி.பியின் ஆதரவானது குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருக்கின்றது. அவ்வாறு அதிகரிப்பதில் ஆச்சரியப்படவும் ஒன்றுமில்லை.

இது ஓர் உண்மையை வெளிப்படுத்துகின்றது அதாவது, ரணில்விக்கிரமசிங்கவால் தனித்து வெற்றி பெற முடியாது. அதேபோன்று சஜித் பிரேமதாஸவாலும் தனித்து வெற்றிபெற முடியாது. இந்த நிலையில் தான் ஜே. வி. பி. ஒரு தீர்மானகரமான அரசியல் சக்தியென்னும் கவனிப்பைப் பெற்றிருக்கின்றது. இல்லா விட்டால் புதுடில்லி அநுரகுமாரவை அழைத்திருக்காது. புதுடில்லியின் அழைப்பு, ஜே. வி. பியின் செல்வாக்கிற்கான ஓர் அங்கீகாரமாகும்.

இந்த இடத்தில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? வழமை போல், ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு பின்னால் சென்று அவர்களின் வாக்குறுதிகளில் திருப்தி கொள்ளப் போகின்றனவா – அல்லது ஜனாதிபதி தேர்தலை ஒரு துருப்புச்சீட்டாக பயன்படுத்தி இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்களும் நிராகரிக்கவே முடியாத ஒரு தரப்பு என்பதை நிரூபிக்கப் போகின்றனவா? என்ன செய்யப்போகின்றன?

தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக தீர்க்கமானதொரு முடிவை எடுத்தால் மட்டுமே தமிழ் மக்களை நோக்கி, இராஜதந்திர தரப்புகள் திரும்பும். இல்லாவிட்டால், இந்த சந்தர்ப்பமும் கை நழுவும். 2009.ற்கு பின்னரான மூன்று தேர்தல்களிலும் தென்னிலங்கையின் வாக்காளர்கள் அதிசயங்களை நிகழ்த்துவார்கள் என்னும் அடிப்படையிலேயே தமிழ் மக்களின் வாக்குகள் அவர்களை நோக்கித் திருப்பப்பட்டது ஆனால் தமிழ் மக்களுக்கு சாதகமாக எதுவுமே நடைபெறவில்லை ஆகக் குறைந்தது. 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கூட அமுல்படுத்த முடியவில்லை. மாகாண சபை தேர்தலைக் கூட அரசாங்கம் நடத்தவில்லை. இவற்றை கருத்தில் கொண்டு, தமிழ் மக்களை திரும்பிப் பார்க்கும் வகையில், ஜனாதிபதி தேர்தலை எவ்வாறு கையாளுவதென்று, தமிழ் கட்சிகள் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவது ஏன்? மத்திய அரசிடம் உயர் நீதிமன்றம் கேள்வி



கச்சத்தீவு அருகில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வது தொடர் நிகழ்வாக இருப்பதைத் தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை என மத்திய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மீனவர் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் பீட்டர் ராயன் தாக்கல் செய்த மனுவில் ‘கச்சத்தீவு பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமநாதபுரத்தைச் சேர்ந்த 6 மீனவர்களை இலங்கை கடற்படையினர் ஜனவரி 22-ம் தேதி கைது செய்துள்ளனர். எனவே இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும்’ என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சய் கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மவுரியா ’கச்சத்தீவு ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு செயல்படுகிறது. கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்க தூதரக அளவில் நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். இன்றும் 23 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த பிரச்சினை குறித்து தீர்வு காண மத்திய மாநில அரசுகள் இணைந்த கூட்டுக்குழுவை அமைக்க வேண்டும்’ என வாதிட்டார்.

தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் ’கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் கடிதம் அனுப்பியிருக்கிறார். கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினருக்கு ஒரு நாளைக்கு 250 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுகிறது’ என்று தெரிவித்தார்.

மத்திய அரசுத் தரப்பில் ஆஜரான உதவி சொலிசிட்டர் ஜெனரல் ராஜேஷ் விவேகானந்தன் இந்த விவகாரத்தில் தூதரக அளவில் நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே இந்த வழக்கு தொடர்பாக விளக்கமளிக்க கால அவகாசம் வேண்டும் என கோரினார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள் மீனவர்கள் கைது நடவடிக்கை என்பது தொடர் நிகழ்வாக இருக்கிறது. இதை தடுக்க ஏன் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை? ஏன் இந்த நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்கிறது? என கேள்வி எழுப்பினர். பின்னர் இந்த வழக்கு தொடர்பாக மத்திய மாநில அரசுகள் விளக்கமளிக்க உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை மார்ச் 11-ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

## இலங்கையுடன் கடல்சார் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் அமெரிக்கா



இலங்கையுடன் கடல்சார் பொருளாதார உறவுகளை அமெரிக்கா மேலும் ஆழமாக்கவுள்ளதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் தெரிவித்துள்ளார். இலங்கையின் 76வது சுதந்திரதினத்தை யோட்டி இலங்கை மக்களிற்கான வாழ்த்துச் செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான வலுவான கூட்டு என்பது பகிரப்பட்ட விழுமியங்கள் ஜனநாயகத்திற்கான அர்ப்பணிப்பு சுதந்திரமான வெளிப்படையான பாதுகாப்பான இந்தோ பசுபிக் போன்றவற்றை அடிப்படையாக கொண்டது என தெரிவித்துள்ள அன்டனி பிளிங்கென் எங்கள் உறவு பாதுகாப்பு ஒத்துழைப்பு பரஸ்பரம் நன்மை பயக்கும் வர்த்தகம் மற்றும் முதலீடு அத்துடன் கல்விபரிமாற்றங்கள் அறிவியல் கூட்டாண்மைகளால் வளர்க்கப்படும் மக்களிடையேயான உறவுகளை அடிப்படையாக கொண்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வருடங்களில் இந்தோ பசுபிக்கின் சகாக்கள் என்ற அடிப்படையில் நாங்கள் இலங்கையுடனான பொருளாதார கடல்சார் உறவுகளை மேலும்வலுப்படுத்துவோம் காலநிலை நெருக்கடி மற்றும் எங்களின் கரிசனைக்குரிய ஏனைய விடயங்களிற்கு தீர்வை காணமுயல்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை கடல் எல்லைக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட சீனாவின் ஆராய்ச்சிக்கப்பல் தற்போது, நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட விசேட பொருளாதார வலயத்திற்குள் காணப்படுவதாக என தகவல்கள் வெளியாகியுள்ளன. சீனாவின் இயற்கை வள அமைச்சிற்கு சொந்தமான தேர்ட் இன்ஸ்டியுட் ஒவ் ஓசோனோலஜியின் ஜியாங் யாங் கொங் 3 என்ற ஆராய்ச்சி கப்பல் இலங்கையின் விசேட பொருளாதார வலயத்திற்குள் காணப்பட்டது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அரசாங்கம் அனுமதி மறுத்ததை தொடர்ந்து குறிப்பிட்ட கப்பல் மாலைதீவை நோக்கி சென்றது எனினும் தற்போது அந்த கப்பல் இலங்கை கடற்பரப்பிற்குள் - இலங்கையின் பொருளாதார வலயத்திற்குள் காணப்படுகின்றது என தகவல்கள் வெளியாகின்றன.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் விவகாரத்தில் இணக்கம் எட்டப்பட்டது

தமிழ் அரசு கட்சியின் பொதுச் செயலாளர் பதவி தொடர்பில் இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது. இதன்படி, திருகோணமலை மாவட்டத்துக்கு ஒரு வருடமும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒரு வருடமும் பொதுச் செயலர் பதவி வழங்கப்படும் என்று தமிழ் அரசு கட்சியின் தலைமைக்கு நெருக்கமான வட்டாரங்கள் ஈழநாடுக்கு தெரிவித்தன.

தமிழ் அரசு கட்சியின் புதிய தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அண்மையில், கிழக்கு மாகாணத்துக்கு சென்று கட்சியினரை சந்தித்துப் பல கட்டப் பேச்சுகளை நடத்தினார். இதன் பிரகாரமே பொதுச் செயலாளர் விவகாரத்துக்கு தீர்வு எட்டப்பட்டது. இதன்படி திருகோணமலையின் ச. குகதாசன், மட்டக்களப்பின் ஞா. சிறீநேசன் ஆகியோர் தலா ஒரு வருடம் பொதுச் செயலர் பதவியை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், பொதுச் செயலாளர் பதவியை முதல் வருடத்தில் வகிப்பது யார் என்பதில் இழுபறி நீடிக்கிறது. இதற்கும் விரைவாகத் தீர்வு காணப்படும் பட்சத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட மத்திய



செயல்குழு கூட்டம் நடைபெறாது. விரைவாகவே தேசிய மாநாட்டை நடத்தி பதவியேற்பு நிகழ்வை நடத்த கட்சியின் புதிய தலைமை சிந்தித்து வருவதாகவும் கூறப்பட்டது.

முன்னதாக, தமிழ் அரசு கட்சியின் பொதுச் செயலாளரை தெரிவு செய்வதற்காக கடந்த மாதம் 27ஆம் திகதி மத்திய செயல்குழு கூடியது. பல வாதப் பிரதிவாதங்களுக்கு பின்னர் கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளையின் தலைவர் குகதாசன் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது. பொதுக்குழுவிலும் குகதாசன் 12 மேலதிக வாக்குகளால் பொதுச் செயலாளராக அங்கீகரிக்கப் பட்டார்.

எனினும், தெரிவின் போது முறைகேடுகள் நடந்தன என்று சர்ச்சைகள் எழுந்த நிலையில் கடந்த மாதம் 28ஆம் திகதி நடைபெறவிருந்த தமிழ்அரசு கட்சியின் தேசிய மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொருளாதாரத்தைப் பலப்படுத்த மாகாணசபைகளுக்கு அதிகாரம்! கொள்கைப் பிரகடனத்தில் ஜனாதிபதி



நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்கள் உரிய வகையில் வழங்கப்படும் என்று கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

06 பெப் 2024 செவ்வாய்கிழமை தனது கொள்கைப் பிரகடன உரையில் தெரிவித்தார். அத்துடன், பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வுகள் இல்லை. பொருளாதார ரீதியான தீர்வே உள்ளது. அறிவியல் தீர்வை தேடவேண்டும். அதனை விடுத்து சில அரசியல் குழுக்களபழைய அரசியல் தீர்வுகளை கூறி பிரசித்தமடைய முயற்சிப்பது கவலைக்குரியது – என்றும் கூறியுள்ளார்.

மேலும், நாட்டை முன்னேற்ற பொது நிலைப்பாட்டுடன் பொதுவான எண்ணத்துடன் ஒன்றுபட முன்வாருங்கள் என்று தனது கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி கொள்கை பிரகடன உரையையும் ஆற்றினார். இந்த உரையின் முக்கியஅம்சங்கள் வருமாறு.

கருத்து வேறுபாடுகள் யாழ்ப்பாணம், திருகோணமலை, பிங்கிரிய, அம்பாந்தோட்டை, கண்டி உள்ளிட்ட நகரங்களிலும் எமது பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டத்தை நாங்கள் நடை முறைப்படுத்துகிறோம். தற்போதும் இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். மேலும், ஒன்பது மாகாணங்களினதும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசமைப்பில் மாகாண சபை அதிகாரங்களின் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு சில அதிகாரங்களை உரிய வகையில் வழங்குவோம்.

பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வுகள் இல்லை. பொருளாதார ரீதியான தீர்வே உள்ளது. அறிவியல் தீர்வை தேட வேண்டும். அதனை விடுத்து சில அரசியல் குழுக்கள் பழைய அரசியல் தீர்வுகளை கூறி பிரசித்தமடைய முயற்சிப்பது கவலைக்குரியதாகும். அரசியல் அபிலாசைகளை மனத்தில் வைத்துக் கொண்டு, தேர்தலில் பெறும் வாக்குகளை இலக்காகக் கொண்டு நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை வழங்கி அல்லது வீண்கதை பேசி எம்மால் முன்நோக்கி செல்ல முடியாது. மாறாக எதிர்கால சந்ததியின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்ல வேண்டும்.

இந்த மாற்றத்தை குறுகிய காலத்தில் செய்துவிட முடியாது. அதற்காக நீண்டகால முயற்சியும் அர்ப்பணிப்பும் அவசியப்படும். இதே பாதையில் தொடர்ந்து சென்றால் 2048 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக மாறலாம். எந்த நெருக்கடிக்கும் குறுகியகால தீர்வுகள் இல்லை. இரண்டு நாட்களில் எந்த இலக்கையும் அடைய முடியாது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சவாலை ஒற்றுமையுடன் எதிர்கொண்டால் மட்டுமே நமது பயணத்தை துரிதப்படுத்த முடியும்.

தமக்குக் கிடைக்கும் அந்தஸ்துகள் பற்றி கனவு காணும் சிலர், அந்த நாட்டை விடவும் பதவிகளை அதிகமாக நேசிக்கின்றனர். அந்த பதவிகளுக் காக நாட்டுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்குகின்றனர். நாட்டையும் மக்களையும் ஏமாற் றுகின்றனர். நடைமுறையை உணராமல் கனவு பாதையில் செல்ல முற்படும் பட்சத்தில் அனர்த்தங்களை எதிர்கொள்ள நேரிடும். நாட்டைக் கட்டியெழுப்பும் கனவை நனவாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## ஒரு சின்னத்தில் இணைதல்

முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பது போல் – இலங்கைதமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் கட்சியை முன்கொண்டு செல்ல முடியாத நிலையில் இருக்கின்றார். அந்தளவுக்கு உள்முரண்பாடுகள் தீவிரமடைந்திருக்கின்றன. ஆனால், அவர் தலைவராகத் தெரிவானதைத் தொடர்ந்து 2009இற்கு முன்னரான கூட்டமைப்பை உருவாக்கப் போகிறாரெனவும் அந்த முயற்சியில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறும் அறிவித்திருந்தார்.

ஆனால், தற்போதுள்ள நிலைமையில் அவ்வாறானதொரு தீர்மானத்துக்கு அவர் வர வேண்டுமாயின், அதற்கும் கட்சிக்குள் வாக்கெடுப்பு நடத்த வேண்டிய நிலைமையே ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் 'குத்துவிளக்கு' சின்னத்தில் ஒன்றிணைந்திருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் இணைந்து பணியாற்றுவது தொடர்பில் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் அரசு கட்சியையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதற்காக எவ்வாறான விட்டுக் கொடுப்புகளையும் செய்வதற்கு தயாராக இருப்பதாகவும் தமிழ் அரசு கட்சியின் சின்னமான வீட்டுச் சின்னத்தை பொதுச் சின்னமாக மாற்றினாலும் அதனை ஏற்றுக் கொள்வதற்கும் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் எல்லாவற்றுக்கும் முன்னால் குத்துவிளக்கு கூட்டின் தலைவர்களில் ஒருவரான சித்தார்த்தன் குறிப்பிடுவது போன்று முதலில் தமிழ்அரசு கட்சிக்குள் நிலவும் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். தமிழர் அரசியலைப் பொறுத்தவரையில் கடந்த பதினான்கு வருடங்களாக சில உச்சரிப்புக்களோடும் அவ்வப்போது தனித்தும் – சேர்ந்தும் சில – பல வெளிநாட்டு பயணங்களாகவும் அந்த பயணங்கள் மீதான அதீத நம்பிக்கைகளை மக்களுக்கு சொல்வதாகவும் தேர்தல் கால வாக்குறுதிகளாகவுமே தமிழ்த் தேசியம் என்னும் பெயரிலான அரசியல் நகர்ந்திருக்கின்றது. இந்த நகர்வின்போது சொல்லிக் கொள்ளும் படி எந்தவோர் அடைவையும் எவருமே காண்பிக்கவில்லை. இந்த நிலையில் தோல்வியடைந்த கட்சி ஒன்றுக்கு யார் தலைவராவது என்னும் அடிப்படையிலான போட்டிதான் இடம் பெற்றது. அதற்கு செயலாளராக யாரை நியமிப்பது என்னும் அடிப்படையில் தான் பிரச்சனைகள் தீவிரமடைந்திருக்கின்றன.

இதே போன்று, தோற்றுப் போன கட்சிகள் அனைத்தும் இணைந்து தான் குத்துவிளக்கு கூட்டணியாக செயல்பட்டு வருகின்றனர். மறுபுறம் இணக்க அரசியலின் முன்னோடியான ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் கட்சியைக் கொண்டு புதிய பாதை ஒன்றை உருவாக்கப் போவதாக அவரின் பேரன் கூறிக் கொண்டிருக்கின்றார்.

மொத்தத்தில், கடந்த முக்கால் நூற்றாண்டு கால தோல்வியின் பிரதிநிதிகள் தான் தற்போதும் அரசியலுக்கு தலைமை தாங்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் முன்னைய வழிமுறைகள் எவையுமே வெற்றிக்கான வழியை காண்பிக்கவில்லை என்பதால் தானே தோல்வி ஏற்பட்டது.

இந்த நிலையில் தோல்வியின் காரணங்களை புரிந்துகொண்டு, அதற்கேற்ப புதிய அரசியல் பாதையொன்றை கண்டு பிடிக்க வேண்டும். வெறும் சுலோகங்களை முன்வைத்து அரசியலை முன்னெடுக்க முடியாது. கடந்த பதினான்கு வருட கால அரசியல் அனுபவங்கள் அதனைத் தெளிவாக படம் பிடித்துக் காண்பித்திருக்கின்றன.

உலக அரசியல் போக்கில் ஏற்பட்டுவரும் மாற்றங்களோ தமிழ்மக்களுக்கு சாதகமான சூழலை சிறியளவில்கூட காண்பிக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்த் தேசிய அரசியலை முன்னிறுத்தும் கட்சிகள் தங்களை பண்பு மாற்றமொன்றுக்கு தயார் செய்ய வேண்டும். கொள்கை நிலைப்பாடு ஒன்றை பேணிப் பாதுகாப்பதில் பிரச்னையில்லை. ஆனால், கொள்கையை கருங்கல் பாறை போன்று எண்ணிக்கொண்டு செயலாற்றக்கூடாது. இந்தப் பின்புலத்தில் அவ்வாறான தொரு பண்பு மாற்றத்தின் ஆரம்பமாக அனைத்து தரப்பினரும் ஒரு பொதுச்சின்னத்தின் கீழ் இணைவது காலத்துக்குத் தேவையானது தான். இங்கு சின்னம் பிரச்னையல்ல மாறாக பண்பு மாற்றமே தேவையானது.

# தமிழரசுக்கட்சித் தலைவரைத் தாக்கிய பொலிஸார்! வீடியோ ஆதாரம் சிக்கியது



பல்கலைகழக மாணவர்களை பொலிஸார் தாக்கிய வேளை அவர்களை மீட்கச் சென்ற போது பொலிஸார் ஒருவர் என்மீது தாக்குதல் நடத்தியிருந்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினத்தன்று பொலிஸார் தாங்கள் நடந்துகொண்ட விதத்தின் மூலம் இலங்கை அரசாங்கத்தின் அராஜகத்தை கோரமுகத்தை சர்வதேச சமூகத்தின் கண்களிற்கு கொண்டு வந்திருக்கின்றார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைகழக மாணவர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் பொலிஸார் மிகவும் காட்டுமிராண்டித்தனமான முறையில் நடந்துகொண்டனர் பல மாணவர்கள் காவித்தூக்கிச் செல்லப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பெண் பொலிஸார் இல்லாமல் பெண்கள் இழுத்துச் செல்லப்பட்டார்கள் தூக்கி வானிலே வீசப்பட்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் ஊர்வலம் வருகின்ற போது தண்ணீர்தாரை வாகனத்துடன் கண்ணீர்புகை குண்டுகளை வீசிய பொலிஸார் மிகவும் மிலேச்சத்தனமாக அடாவடியாக நடந்து கொண்டார்கள்.

மிகவும் ஜனநாயக அடிப்படையில் தனக்கிருக்கின்ற மனித உரிமைகளின் அடிப்படையில் போராட்டத்தை முன்னெடுத்த பல்கலைக்கழக மாணவர்கள் பொதுமக்கள் மீது மிகவும் மோசமாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும் பொலிஸார் நடந்து கொண்டமை வரலாற்றில் மீண்டும் ஒருமுறை இலங்கையில் பொலிஸாரின் அடாவடித்தனத்தை அடையாளப்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல மாணவர்கள் அடித்து துன்புறுத்தப்பட்டார்கள் இதுவெல்லாம் நடைபெற்ற பின்னர் ஐந்து மாணவர்கள் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட விடயத்திலே அந்த மக்கள் 3-30 மணிவரை காத்திருந்தார்கள். அவர்களை விடுதலை செய்யும்வரை வெளியேற மாட்டோம் என காத்திருந்தார்கள் நண்பர் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதனும் பல்கலைக்கழக மாணவர்களும் பொலிஸ் நிலையம் சென்று அவர்களை விடுவித்துக் கொண்ட வந்த பின்னர் தான் இந்த போராட்டம் முடிவிற்கு வந்திருக்கின்றது எனவும் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பல்கலைகழக மாணவர்களை பொலிஸார் தாக்கியவேளை நான் அவர்களை மீட்கச்சென்றவேளை பொலிஸார் ஒருவர் என்மீது தாக்குதல் நடத்தியிருந்தார் அதற்குரிய வீடியோ ஆதாரங்கள் உள்ளன நான் அதனை உரிய நேரத்தில் வெளியிடுவேன் எனவும் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

# யாழ்.வட்டுக்கோட்டை பொலிசாரால் யாழ்.பல்கலைக்கழக மாணவன் சித்திரவதையென மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு



யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் உள்ள இரகசிய அறையில் வைத்து தன்னை தலைகீழாக தூக்கி அடித்து சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணவன் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் பல்கலைக்கழக மாணவனான கருணாகரன் நிதர்சன் எனும் மாணவன் 05 பெப் 2024 திங்கட்கிழமை முறைப்பாடு பதிவு செய்துள்ளார். சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவிக்கையில்,

வட்டுக்கோட்டை மாவடி பகுதியில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் தன்னை வழி மறித்து தான் மறிக்கும் போது ஏன் மோட்டார் சைக்கிளை நிறுத்தவில்லை என என்னுடன் முரண்பட்டார்.

அதற்கு நான் நீங்கள் மறித்ததை கவனிக்கவில்லை. என கூறி, ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் உள்ளன, என அவற்றை எடுத்து கொடுத்த போது அதனை வாங்காது, மேலதிக பொலிஸார் அவ்விடத்திற்கு வரவழைத்தார்.

அதன் போது சிவில் உடையில் வந்த 7க்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் எவ்வித விசாரணைகளும் இன்றி என்னை வீதியில் வைத்து, மக்கள் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே கடுமையாக தாக்கினார்கள். என்னை தாக்கும் சம்பவம் அருகில் உள்ள கடையில் கண்காணிப்பு கமராக்களில் கூட பதிவாகியுள்ளது. அத்துடன் நானும் எனது கைபேசியில் என்னை தாக்குவதனை காணொளி எடுத்தேன்.

பின்னர் என்னை பொலிஸ் வாகனத்தில் ஏற்றி சென்று பொலிஸ் நிலையத்தில் உள்ள இரகசிய அறைக்குள் என்னை அழைத்து சென்று என்னுடைய ஆவணங்கள் மற்றும் கைபேசி என்பவற்றை பறித்தார்கள். கைபேசியின் இரகசிய குறியீட்டை கேட்ட போது , அதனை தர முடியாது என மறுத்த போது, என் கால்களை பிடித்து தலைகீழாக தூக்கி கடுமையாக தாக்கினார்கள். என் ஆணுறுப்பை குறிவைத்தும் கடுமையாக தாக்கினார்கள். இதனால் எனக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. வியர்க்க தொடங்கியது.

அதனை அடுத்து என்னை அறையில் இருந்து, வெளியே அழைத்து வந்து, கதிரையில் அமர வைத்து விட்டு சென்று விட்டார்கள். பின்னர் நான் பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேறி வந்தேன். என்னை பொலிஸாரின் இரகசிய அறைக்குள் அழைத்து சென்றதனை, பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த மூவர் கண்கள் கண்டார்கள்.

அறைக்குள் வைத்து அடிக்கும் போது, நான் எழுப்பிய அவலக்குரல் அவர்களுக்கும் கேட்டு இருக்கும். அடித்த பின்னர் என்னை கைத்தாங்கலாக பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அழைத்து வந்து கதிரையில் அமர வைத்ததையும் தடுப்பு காவலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த மூவரும் நேரில் கண்டார்கள். எவ்வித குற்றமும் இழைக்காத என்னை சிவில் உடை தரித்த பொலிஸார் மூர்க்கத்தனமாக தாக்கி சித்திர வதைக்கு உள்ளாக்கியுள்ளனர். என்னை கொலை செய்யும் நோக்குடன் என் ஆணுறுப்பை குறித்து வைத்தும் தாக்கினார்கள்.

இந்நிலையில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளமையால் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளேன் என தெரிவித்தார்.

இதேவேளை, வட்டுக்கோட்டை பொலிஸாரினால், கடுமையான சித்திரவதைக்கு உள்ளான நகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார். குறித்த உயிரிழப்பானது ஆட்கொலையே என யாழ்.நீதவான் நீதிமன்றம் மரண விசாரணை கட்டளையில் குறிப்பிட்டுள்ளது.

இளைஞனின் கொலை தொடர்பில் நேரடி சாட்சியான, இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞன், சித்திரவதைக்கு தம்மை உள்ளாக்கியவர்கள் ஐவர் என அடையாளம் கூறிய போதிலும், பொலிஸார் நால்வரையே கைது செய்து மன்றில் முற்படுத்தி வழக்கு விசாரணைகளை முன்னெடுத்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த வாரம், சுன்னாகம் பொலிஸாரினால் திருட்டு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவரை சுன்னாகம் பொலிஸார் கடுமையாக தாக்கி சித்திரவதைக்கு உள்ளாகிய நிலையில், கைதான இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று இருந்தார். அச்சுவேலி பொலிஸாரினால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, விசாரணைக்கு செல்லாத இளைஞனை அச்சுவேலி பொலிஸார் வீதியில் வழிமறித்து கடுமையாக தாக்கியமையால், இளைஞன் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

## 23வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் சஞ்சயன் வசந்தகுமார்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி வசந்தகுமார் ராஜவினோதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஞ்சயனின் 23வது பிறந்த நன்நாள் 27 ஜனவரி 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் செல்வன் சஞ்சயனும் அவரது பெற்றோர்களும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினோர்கள். அகவை இருபத்திமூன்று காணும் செல்வன் சஞ்சயன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வாழ்த்தும் அவரது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

# சாந்தனை நாட்டுக்குக் கொண்டு வரப் போவது யார்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

சாந்தன் இலங்கை வருவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி சிறிதரனுக்கும் மனோ கணேசனுக்கும் கூறியுள்ளார். சனிக்கிழமை நடந்த சந்திப்பில் மேற்கண்டவாறு ரணில் தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க அரசியலின் மூலமே இது சாத்தியமாகியது என்று ஈ. பி.டி.பியின் பேச்சாளர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை சாந்தனின் தாயார் அமைச்சர் டாக்டர் தேவானந்தாவை சந்தித்தார். சாந்தனை இலங்கைக்கு கொண்டு வர தான் நடவடிக்கை எடுப்பதாக தேவானந்தா சாந்தனின் தாயாருக்கு உறுதி கூறியுள்ளார்.

சாந்தனை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு உதவுமாறு அவருடைய குடும்பத்தவர்கள் முதலில் அணுகியது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளைத் தான். இந்திய உச்ச நீதி மன்றத்தால் சாந்தன் விடுதலை செய்யப்பட்டபின் கிட்டத்தட்ட 15 மாதங்களுக்கு முன்பு இக்கோரிக்கையை முன்வைத்து சாந்தனின் குடும்பத்தவர்கள் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட அரசியல்வாதிகளோடு பேசினார்கள். ஆனால் யாரும் பயன் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.



கடந்த சில வாரங்களாக சாந்தன் நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அதனால் அவரை நாட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அவருடைய குடும்பத்தவர்கள் மீண்டும் அரசியல்வாதிகளை அணுகத் தொடங்கினார்கள். சாந்தனை நாட்டுக்கு கொண்டு வருவதில் உள்ள பிரச்சனைகள் எவை?

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட அனைவரும் முப்பது ஆண்டுகளின் பின் உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்கள். அவ்வாறு விடுவிக்கப்பட்ட இந்தியத் தமிழர்கள் தமது வீடுகளுக்கு சென்று விட்டார்கள். ஆனால் விடுவிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் தொடர்ந்தும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதற்குக் கூறப்பட்ட காரணம் என்னவென்றால் அது போன்ற பாரதூரமான வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் வெளிநாட்டவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு விடுதலை அல்லது மன்னிப்பு வழங்கப்பட்ட பின் அவர்கள் இந்திய மண்ணில் தொடர்ந்தும் தரித்திருப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதாகும்.

விடுவிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் தமது நாட்டுக்குத் திரும்பி அனுப்பப்பட வேண்டும். எனினும் அதில் சாந்தனைத் தவிர ஏனைய மூவரும் நாட்டுக்கு திரும்பி வர விரும்பவில்லை. அவர்களுடைய உறவினர்கள் புலம்பெயர்ந்து வாழ்வதால் அந்தந்த புலம்பெயர்ந்த நாடுகளுக்குத் தாமும் செல்ல விரும்புவதாகத் தெரிவித்தார்கள். ஆனால் இந்தியச் சட்டங்களின்படி அவர்களை அவ்வாறு அவர்களுடைய சொந்த நாடு அல்லாத ஏனைய நாடுகளுக்கு செல்ல அனுமதிப்பதில் சட்டச் சிக்கல்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே சாந்தனும் உட்பட அனைவரும் மீண்டும் திருச்சி சிறப்பு முகாமில் கடந்த 15 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப் புதிய சிறப்பு முகாமானது இதற்கு முன்பு அவர்கள் வைக்கப்பட்டிருந்த சிறப்பு முகாமுடன் ஒப்பிடுகையில் வசதிகள் குறைவானது. அங்கே ஒரு சிறிய அறைக்குள் இருவர் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். 15-க்கும் குறையாத காவலர்கள் அவர்களைத் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருப்பார்கள். அந்த அறையோடு கழிப்பறையும் குளியலறையும் இணைக்கப்பட்டுள்ளன. எனவே அவர்கள் அறையை விட்டு வெளியே வருவதற்கான தேவைகள் குறைவு. அதற்குமுன் இருந்த சிறப்பு முகாமில் அவர்கள் காலை 6.00 மணிக்கு வெளியே வந்தால் மாலை 6:00 மணி வரையிலும் நடந்து திரியலாம்: உடற்பயிற்சி செய்யலாம் நூலகத்திற்கு செல்லலாம் பிரார்த்தனைகளில் ஈடுபடலாம். ஆனால் புதிய முகாமில் அந்தளவு வசதிகள் இருக்கவில்லை அது ஒரு புதிய வகைத் தண்டனையாக அவர்களுக்கு அமைந்தது.

ஏற்கனவேநோய் வாய்ப்பட்டிருந்த சாந்தன் இப்பொழுது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் அளவுக்கு நோயாளி ஆகிவிட்டார். சிறை வைக்கப்பட்டதிலிருந்து இன்று வரையிலும் அவருடைய தாயார் அவரைப் பார்க்கவில்லை. முதிய தாயார் விமானத்தில் பயணிக்க முடியாத அளவுக்கு ஆஸ்துமா நோயாளியாக இருக்கிறார். சாந்தன் நாடு திரும்ப விரும்புகிறார். தனது குடும்பத்தவர்களோடு தனது மிஞ்சிய காலத்தை கழிப்பதற்கு விரும்புகிறார்.

சிறையில் அவர் ஏறக்குறைய ஓர் ஆன்மீகவாதி போலாகி விட்டார் என்று அவருடைய வழக்கறிஞர்கள் கூறுகிறார்கள். ஆன்மீக விடயங்களையே அவர் அதிகம் கதைப்பதாகவும் பற்றற்றவர் போல அவர் நடந்து கொள்வதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். நாட்டுக்குத் திரும்பி தன் தாய் சகோதரர்களோடு அவர் வாழ விரும்புவதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர் நாடு திரும்பினால் இலங்கையில் அவர் பாதுகாப்பாக இருக்கலாமா என்ற சந்தேகம் தமிழகத்தில் உள்ள செயற்பாட்டாளர்களுக்கு உண்டு.

இந்திய உச்ச நீதிமன்றம் சாந்தனும் உட்பட வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை விடுதலை செய்த பின் அவர்கள் நாட்டுக்குத் திரும்பினால் என்ன நடக்கும் என்ற கேள்வி அவருக்காக வாதாடிய தமிழக வழக்கறிஞர்களிடம் இருந்தது. இக்கேள்வியை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் எழுப்பி சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் இருந்து உத்தியோக பூர்வ பதில் ஒன்றை பெற்றுக் கொள்வது நல்லது என்றும் யோசிக்கப்பட்டது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அக் கேள்வியை சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஏனெனில், இது விடயத்தில் முடிவெடுக்க வேண்டியது இலங்கை அரசாங்கம் தான். இலங்கைத் தீவின் வெளி விவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சுந்தான். எனவே, அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருக்க வேண்டியதும் இலங்கை அரசாங்கத்தின் மீது நிர்பந்தங்களை பிரயோகித்திருக்க வேண்டியதும் நாட்டில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தான்.

இந்த அடிப்படையில் சாந்தனின் குடும்பத்தவர்கள் நாட்டில் உள்ள மக்கள் பிரதிநிதிகளுடன் உரையாடியிருக்கிறார்கள். சில அரசியல் செயற்பாட்டாளர்கள் விக்னேஸ்வரனும் உட்பட தமிழ் மக்கள் பிரதிநிதிகளோடு இதுதொடர்பாக உரையாடியிருக்கிறார்கள். யாருமே அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. நாடாளுமன்றத்தில் உரையாற்றியது, அறிக்கை விட்டது, சாந்தனின் வீட்டுக்குச் சென்று அவருடைய தாயாரைச் சந்தித்து ஆறுதல் கூறியது, என்பவற்றிற்கும் அப்பால் எந்த ஒருதமிழ் நாடாளுமன்ற உறுப்பினரிடம் அது தொடர்பாக நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகள் இருக்கவில்லை.

சாந்தனின் வீட்டுக்குச் சென்று அவருடைய தாயாரோடு உரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர்களில் சுமந்திரன் ஒருவர். அதன்பின் அவர் அது தொடர்பாக ஜனாதிபதியோடு பேசியதாகவும், ஆனால் ஜனாதிபதி தென்னிலங்கையில் ஏற்படக்கூடிய விளைவுகளையிட்டுப் பயப்பட்டதாகவும் ஊடகவியலாளர் வித்தியாதரன் அவருடைய பத்திரிகையில் எழுதியுள்ளார்.

இப்பொழுது சாந்தன் நோயாளியாகி விட்டார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய குடும்பத்தவர்கள் விவகாரத்தை மீண்டும் -15 மாதங்களின் பின்- தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பெரும்பாலான தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்திருக்கிறார்கள். தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிறிதரன் தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு ஒரு கடிதம் எழுதியதாகத் தகவல்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யாழ் இந்திய துணை தூதரகத்திற்கு ஒரு கடிதம் எழுதியதாகவும் கடிதத்துக்கு இந்திய துணைத் தூதரகம் பதிலளித்திருப்பதாகவும் ஒருதகவல்.

சாந்தனை நாட்டுக்குள் அனுமதிக்கும் முடிவை எடுக்க வேண்டியது யார்? இந்திய மத்திய அரசா? அல்லது தமிழக முதல்வரா? அல்லது இலங்கை அரசாங்கமா? இலங்கைத் தீவின் வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும்தான்

அது தொடர்பான முடிவுகளை எடுக்க வேண்டும். சாந்தனை நாட்டுக்குள் வரவிடுவது என்ற முடிவை வெளிவிவகார அமைச்சு எடுக்குமாக இருந்தால் அதற்கு வேண்டிய தற்காலிக பயண ஆவணங்களைக் கொடுக்குமாறு சென்னையில் உள்ள இலங்கை உப தூதரகத்திற்கு உத்தரவுகளை வழங்கலாம்.

சாந்தன் அல்லாத ஏனைய மூவரின் விடயத்தில் இந்திய மத்திய அரசு முடிவெடுக்க வேண்டியுள்ளது. அவர்களை புலம்பெயர்ந்த நாடுகளுக்கு செல்ல அனுமதிப்பதா இல்லையா என்று. ஆனால் சாந்தனின் விடயத்தில் முடிவு இலங்கை அரசாங்கத்தின் கையில் தான் உண்டு. எனவே அதற்கு வேண்டிய முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியது நாட்டில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மனித உரிமை அமைப்புகளும் குடிமக்கள் சமூகங்களும் தான். யாருக்கு கடிதம் எழுத வேண்டுமோ, யாருடன் நேரடியாகப் பேச வேண்டுமோ அவர்களோடு உரையாடியிருந்திருக்க வேண்டும்.

முடிவில், சலித்துப் போன சாந்தனின் தாயார், கடந்த வாரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அணுகியதாகத் தெரிகிறது. தேவானந்தா நீதி அமைச்சரோடு அது பற்றி உரையாடியதாகக் கூறப்படுகிறது. மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினராகிய அங்கஜன் ராமநாதனும் இந்தவிடயத்தில் அக்கறை காட்டியிருக்கிறார்.

சில நாட்களுக்கு முன் சிறீதரன் வெளி விவகார அமைச்சரோடு தொலைபேசியில் உரையாடியதாக ஒரு தகவல். அதாவது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் மட்டுமன்றி அதற்கு வெளியே நிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சாந்தனின் விடயத்தில் அக்கறை காட்டியிருப்பதாகத் தெரிகிறது.

கடந்த 15 மாதங்களாக சாந்தனின் குடும்பத்தவர்களுக்குத் திருப்தியான ஒருபதிலைக் கொடுக்க தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட அரசியல்வாதிகளால் முடியவில்லை. அதாவது சாந்தனின் விடயத்தில் அவர்கள் மந்தமாகவே இயங்கியிருக்கிறார்கள். அது தமிழ்த் தேசிய அரசியலின் மந்தத் தனத்தையும் கையாலாகாத் தனத்தையும் காட்டுகின்றதா? (ஆதவன் செய்தி)

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுபேந்திரன் (ஞீ) முத்தையா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா மொன்றியல், ரொறன்ரோ ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சுபேந்திரன் முத்தையா அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 07 பெப்ரவரி 2024 புதன் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் திரு சுபேந்திரன் முத்தையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள்.

இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

20 ஜனவரி 2024 09 பெப்ரவரி 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 45வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வாலாம்பிகை கதிர்காமசேகரர்

"திருவேரகம்" சரசாலை வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி வாலாம்பிகை கதிர்காமசேகரர் அவர்களது 45வது ஆண்டு நினைவு நாள் 19 ஜனவரி 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி வாலம்பிகை கதிர்காமசேகரர் அவர்களது அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மார்க்கண்டு இலட்சுமிப்பிள்ளை

புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு இலட்சுமிப்பிள்ளை அவர்களது முதலாவது ஆண்டு நினைவு தினம் 21 ஜனவரி 2024 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்புப் உணவு வழங்கினார்கள். திருமதி மார்க்கண்டு இலட்சுமிபிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 16வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 16வது ஆண்டு நாள் நினைவு நாள் 29 ஜனவரி 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நல்லையா மகேந்திரன்

பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லையா மகேந்திரன் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 26 ஜனவரி 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நல்லையா மகேந்திரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 37வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு அப்புக்குட்டி நல்லையா

யாழ்ப்பாணம் கட்டுவனைச் சேர்ந்த திரு அப்பாக்குட்டி நல்லையா அவர்களது 36வது ஆண்டு நினைவு நாள் 26 ஜனவரி 2024 வெள்ளிக் கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். அமரர் திரு அப்பாக்குட்டி நல்லையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 90வது பிறந்த நாள் நினைவாக



### திரு சண்முகம் இரத்தினவடிவேல்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் தம்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு சண்முகம் இரத்தின வடிவேல் அவர்களின் 90வது பிறந்தநாள் 22 ஜனவரி 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்தநாள் நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




19 ஜனவரி 2024 வெள்ளிக்கிழமை சரசாலை சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி வாலாம்பிகை கதிர்காமசேகரர் அவர்களது 45வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




14 ஜனவரி 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கண்ணன் வத்சலா தம்பதிகளின் செல்வப்புதல்வி டீகா கண்ணன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினத்திற்காக 20 ஜனவரி 2024 சனிக்கிழமை செல்வி டீகா கண்ணன் அவர்கள் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




21 ஜனவரி 2024 ஞாயிற்றுக்கிழமை தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த டாக்டர் கந்தையா இராஜதுரை அவர்களது 26வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




21 ஜனவரி 2024 ஞாயிற்றுக்கிழமை புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு இலட்சுமிப்பிள்ளை அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 ஜனவரி 2024 திங்கட்கிழமை மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், தம்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களது 90வது பிறந்த நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது பிறந்த நாள் நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




23 ஜனவரி 2024 செவ்வாய்க்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




23 ஜனவரி 2024 செவ்வாய்க்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அர்ச்சுனன் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 ஜனவரி 2024 வெள்ளிக்கிழமை யாழ்.கட்டுவனைச் சேர்ந்த திரு நல்லையா அப்புக்குட்டி அவர்களது 37வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





26 ஜனவரி 2024 வெள்ளிக்கிழமை மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 ஜனவரி 2024 வெள்ளிக்கிழமை பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நல்லையா மகேந்திரன் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அனட்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




27 ஜனவரி 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி வசந்தகுமார் இராஜவினோதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் சஞ்சயனின் 23வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் சஞ்சயன் அவர்கள் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்





29 ஜனவரி 2024 திங்கட்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 16வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 பெப்ரவரி 2024 வியாழக்கிழமை அனலைதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தம்பையா இரத்தினம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




02 பெப்ரவரி 2024 வெள்ளிக்கிழமை தாவடி வடக்கு கொக்குவிலைச் சேர்ந்தவர்களான திரு இராஜதுரை செல்லையா திருமதி நாகரெத்தினம் இராஜதுரை இணையர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




02 பெப்ரவரி 2024 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



03 பெப்ரவரி 2024 சனிக்கிழமை தையிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அப்புக்குட்டி சின்னம்மா அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



04 பெப்ரவரி 2024 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவமணி பாலசிங்கம் அவர்களது 31ம் நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



05 பெப்ரவரி 2024 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சாந்தகுமார் ஜெயராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அகத்தியனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அகத்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் குளிர்பானங்களும் வழங்கி மகிழந்தார்



05 பெப்ரவரி 2024 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சாந்தகுமார் ஜெயராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அகத்தியனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அகத்தியன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் குளிர்பானங்களும் வழங்கி மகிழந்தார்



06 பெப்ரவரி 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி தர்சனா உதயனின் 13வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி தர்சனா உதயன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழந்தார்



07 பெப்ரவரி 2024 புதன்கிழமை புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் ரொறன்ரோ கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முத்தையா சுபேந்திரன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அப்புத்துரை சின்னம்மா

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 03 பெப்ரவரி 2024 சனிக்கிழமை ஆகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி தம்பையா இரத்தினம்

அனலைதீவு மூன்றாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தம்பையா இரத்தினம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 01 பெப்ரவரி 2024 திங்கட்கிழமை ஆகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தம்பையா இரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 26வது ஆண்டு நினைவஞ்சலி



### Dr கந்தையா இராஜதுரை

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த டாக்டர் கந்தையா இராஜதுரை அவர்களது 26வது ஆன்டு நினைவு நாள் 21 ஜனவரி 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். டாக்டர் கந்தையா இராஜதுரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி பிரசாந்தி அர்ச்சுனன்

வேணையைப் பிறப்பிடமாகவும் நோர்த்யோர்க் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அர்ச்சுனன் அவர்களதுஇரண்டாவது ஆண்டு நினைவு நாள் 23 ஜனவரி 2024 செவ்வாய்க்கிழமை ஆகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வி பிரசாந்தி அர்ச்சுனன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பொன்னையா தம்பையா

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகக் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 02 பெப்ரவரி 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பொன்னையா தம்பையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீபதி ஞானாம்பிகை

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் திதி 26 ஜனவரி 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி ஞானாம்பிகை ஸ்ரீபதி அவர்களது ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி
## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

வெ.சந்திரமோகன்

# திருப்புமுனையாகும் பீஹார் அரசியல் களம்!



உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியில் 'டாஸ்' போடுவதற்குச் சற்று முன்பு, ஒரு அணியின் கேப்டன், திடீரென எதிரணியில் சேர்ந்து விளையாட ஆயத்தமானால் எப்படி இருக்கும்? பிஹாரில் நிதீஷ் குமார் நிகழ்த்தியிருக்கும் அரசியல் 'பல்டி' அப்படிப்பட்டதுதான்.

பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கே மீண்டும் திரும்பி, மீண்டும் (!) முதல்வராகியிருக்கிறார். ஆனால், இதில் ஒரு சிறிய வித்தியாசம் இருக்கிறது. 'இண்டியா' கூட்டணியின் 'கேப்டன்'னாக நிதீஷ் நியமிக்கப்படவே இல்லை. நிதீஷ் நிம்மதியிழந்து வெளியேற அது முக்கியக் காரணம். கூடவே பாஜகவின் அஸ்திரங்கள், காங்கிரஸ் - ராஷ்ட்ரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி) மீதான அதிருப்தி என வேறு சில காரணிகளும் உண்டு.

### பின்னணி என்ன

2022 ஆகஸ்ட் மாதம் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து வெளியேறி மகாகட்பந்தன் கூட்டணி சார்பில் மீண்டும் முதல்வரான நிதீஷ் குமார், 2023 ஜூன் மாதத்தில் பாஜகவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை அணிதிரட்டத் தொடங்கினார். பின்னர், 'இண்டியா' என நாமகரணம் சூட்டப்பட்ட அந்தக் கூட்டணிக் கட்சிகளின் மொத்த வாக்குவிகிதம் 38 வீதம் எனப் பேசப்பட்டது.

பாஜகவின் வாக்கு சதவீதம் 37 வீதம்தான். இண்டியா கூட்டணியின் முதல் கூட்டத்தைப் பிஹார் தலைநகர் பாட்னாவில்தான் நிதீஷ் நடத்தினார். ஒருவகையில், அக்கூட்டணியின் மாதிரி வடிவமாக பிஹார் அரசும் - அரசியல் களமும் இருந்தன.

இதற்கிடையே, 2024 மக்களவைத் தேர்தலுக்குப் பின்னர் பிஹார் முதலமைச்சர் பதவி, துணை முதல்வர் தேஜஸ்வி யாதவுக்கு வழங்கப்பட வேண்டும் என ஏற்கெனவே ஒப்பந்தம் செய்திருப்பதால், பதவியை விட்டுக்கொடுக்க மனமில்லாமல் நிதீஷ் பரிதவிப்பில் இருந்தார்.

தவிர, இண்டியா கூட்டணியின் ஒருங்கிணைப்பாளராகத் தான் நியமிக்கப்பட வேண்டும் என்றும் விரும்பினார். கடைசியாக நடந்த இண்டியா கூட்டணிக் காணொளிக் கூட்டத்தில், ஒருங்கிணைப்பாளராக நிதீஷை நியமிக்க சோனியா காந்தி தீர்மானித்திருந்த நிலையில், மம்தா பானர்ஜியின் அபிப்ராயத்துக்காகக் காத்திருக்கலாம் என்று ராகுல் காந்தி கூறியது நிதீஷை அதிருப்திக்கு உள்ளாக்கியது என்கிறார்கள்.

ஒருங்கிணைப்பாளர் பதவி கிடைத்தால் பிரதமர் வேட்பாளராகும் வாய்ப்பு பிரகாசமாகும் என்று நிதீஷ் நினைத்திருந்தார். மல்லிகார்ஜுன கார்கேயை மம்தா பானர்ஜியும், அர்விந்த் கேஜ்ரிவாலும் முன்னிறுத்தியதை அவர் ரசிக்கவில்லை.

சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி பாஜகவுக்கு ஏற்கெனவே நிதீஷ் சவால் விட்டிருந்த நிலையில், பிஹாரில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு (1977இல்) வழங்கிய கர்பூரி தாக்கூருக்குச் சமீபத்தில் பாரத ரத்னா விருதை பாஜக அறிவித்தது. அதை வரவேற்றதுடன் மோடியின் புகழ் பாடவும் தொடங்கினார் நிதீஷ். ஆர்ஜேடி ஆத்திரமடைந்தது. இண்டியா கூட்டணியும் கலகலத்தது. காட்சி மாறியது.

### காங்கிரஸ்க்குச் சவால்கள்

காங்கிரஸின் பிடிவாதமான அணுகுமுறையால் மேலும் பல சிக்கல்கள் விளைந்தன. கூட்டணிக்கு ஒருங்கிணைப்பாளர் தேர்வுசெய்யப்படவில்லை. தொகுதிப் பங்கீடு குறித்து தீவிர ஆலோசனை இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. ஏற்கெனவே மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களின் தேர்தல்களில் பாஜகவிடம் காங்கிரஸ் தோல்வியடைந்ததற்கு, கூட்டணிக் கட்சிகளுக்கு இடம் கொடுக்காமல் தனியாகக் களம் கண்டது முக்கியக் காரணமாக முன்வைக்கப்படுகிறது.

படுதோல்விக்குப் பிறகாவது தொகுதிப் பங்கீடு விஷயத்தில் துரிதம் காட்டவோ, இலகுவாக நடந்துகொள்ளவோ காங்கிரஸ் முயலவில்லை என்கிறார்கள். விளைவு, ராகுல் காந்தியின் 'நியாய யாத்திரை' மேற்கு வங்கத்துக்குள் நுழைவதற்கு முன்னர், மம்தா பானர்ஜி 42 தொகுதிகளிலும் திரிணமூல் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் என்று அதிரடியாக அறிவித்தார். பிஹாரில் நுழைவதற்கு முன்னர் நிதீஷ் தனது பழைய அணிக்குத் தாவிவிட்டார்.

காங்கிரஸின் செல்வாக்குக் கணிசமாகச் சரிந்துவிட்ட உத்தரப் பிரதேசத்தில், அக்கட்சிக்கு 11 இடங்களை வழங்குவதாக சமாஜ்வாதி கட்சி கூறுகிறது. ஆனால், குறைந்தபட்சம் 15 இடங்களாவது வேண்டும் என்று காங்கிரஸ் பிடிவாதம் காட்டுகிறது. பஞ்சாப் மாநிலக் காங்கிரஸ் தலைவர்கள் ஆம் ஆத்மி கட்சியுடன் கூட்டணி வைக்கக் கூடாது என்று போர்க் கொடி தூக்கியிருக்கிறார்கள். குஜராத், ஹரியாணா மாநிலங்களில் தங்களுக்குக் கணிசமான இடங்களைக் காங்கிரஸ் தந்தால்தான் பஞ்சாப், டெல்லியில் அக்கட்சிக்குத் தொகுதிகளை ஒதுக்க முடியும் என்கிறது ஆம் ஆத்மி கட்சி. இப்படி நிறைய சிக்கல்கள்!

### பலன் பெறும் பாஜக

மறுபுறம் குடியுரிமைத் திருத்தச் சட்டம், பொது சிவில் சட்டம், லாலுபிரசாத் யாதவ் - ஹேமந்த் சோரன் போன்ற தலைவர்கள் மீது அமலாக்கத் துறை நடவடிக்கைகள் எனஅடுத்தடுத்து அஸ்திரங்களை ஏவி எதிர்க்கட்சிகளைத் தவிக்கவிடுகிறது பாஜக. இவ்வளவு களேபரங்களுக்கு மத்தியிலும் 23 மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களுக்குத் தேர்தல் பொறுப்பாளர்களை அக்கட்சி நியமித்துவிட்டது.

இந்தி பேசும் மாநிலங்களான உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், உத்தராகண்ட், ஹரியாணா வரிசையில் மிச்சமிருந்த பிஹாரும் இப்போது பாஜகவின் கைக்குள் சென்றுவிட்டது. ஏற்கெனவே ராமர் கோயில் திறப்புவிழா மூலம் சாதிகளைக் கடந்து இந்து மதத்தினரைக் கவர்வதில் வெற்றி பெற்றிருக்கும் பாஜக, சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்திய நிதீஷ் இப்போது தங்கள் பக்கம் இருப்பதால் ஓபிசி அரசியலில் எதிர்க்கட்சிகளுக்குப் பெரிய சவாலை உருவாக்கியிருக்கிறது. ஆக, 'கமண்டல்', 'மண்டல்' என இரண்டு அஸ்திரங்கள் பாஜக வசம் இருக்கின்றன.

ஐக்கிய ஜனதா தளத்துக்கு மாநிலங்களவையில் ஐந்து உறுப்பினர்கள் இருக்கும் நிலையில், நிதீஷின் அணி மாற்றத்தால் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 114 உறுப்பினர்கள் என மாநிலங்களவையில் வலிமை கூடுகிறது. அது மட்டுமல்ல, பெருந்தலை நிதீஷே பாஜக பக்கம் சென்றுவிட்ட நிலையில், வேறு சில கட்சிகளும் பாஜக பக்கம் ஈர்க்கப்பட சாத்தியம் அதிகம்.

### நிதீஷின் எதிர்காலம்

அடிக்கடி அணி மாறியதால் அரசியல் வட்டாரத்தில் கேலிப்பொருளாகியிருக்கிறார் நிதீஷ். மேலும், பாஜக அப்படியொன்றும் அவரை நிம்மதியாக வைத்திருக்காது என்றே சொல்லலாம். 2020 தேர்தலில் லோக் ஜனசக்திக் கட்சித் தலைவர் சிராக் பாஸ்வானின் துணையுடன் ஓர் அரசியல் சதுரங்கம் ஆடிய பாஜக, அதன் மூலம் நிதீஷின் ஐக்கிய ஜனதா கட்சியின் வெற்றி விகிதத்தை வெகுவாகக் குறைத்தது.

அவரை மீண்டும் முதல்வராக்கினாலும், அவரால் வெறுக்கப்படும் தார்கிஷோர் பிரசாத், ரேணு தேவி ஆகியோரைத் துணை முதல்வர்களாக்கி அழுத்தம் கொடுத்தது. இந்த முறையும், நிதீஷைச் சகட்டுமேனிக்கும் விமர்சித்துவந்த சாம்ராட் சௌத்ரி, விஜய் குமார் சின்ஹா ஆகிய இருவரையும் துணை முதல்வர்களாக்கியிருக்கிறது பாஜக.

தவிர, நிதீஷின் வரவால் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள லோக் ஜனசக்தி கட்சி, ஹிந்துஸ்தான் அவாம் மோர்ச்சா போன்ற சிறிய கட்சிகள் கலக்கத்தில் உள்ளன. தொகுதிப் பங்கீட்டில் சிக்கல் வரலாம்.

### இண்டியா கூட்டணியின் சாதகங்கள்

காங்கிரஸால் அதிருப்தி அடைந்திருந்தாலும் கூட்டணியை விட்டு வெளியேறாத மம்தா பானர்ஜி, இப்படியெல்லாம் நிதீஷ்குமார் செய்யக்கூடும் என முன்பே தெரிந்திருந்ததால்தான் அவரை ஒருங்கிணைப்பாளராக முன்னிறுத்தவில்லை என்று சுட்டிக்காட்டுகிறார். நிதீஷ் வெளியேறியதால், பிஹாரில் இனி காங்கிரஸ் - ஆர்ஜேடி - இடதுசாரிகள் இடையே தொகுதிப் பங்கீடு எளிதாகும்.

நிதீஷ் போல் அல்லாது, நம்பகத்துக்குரியவர் என்பதால் மல்லிகார்ஜுன கார்கேயின் பங்கு இனி முதன்மையாக இருக்கும் என நம்பப்படுகிறது. நிதீஷைச் சீண்டும் வகையில், சாதிவாரிக் கணக்கெடுப்பு, 4 லட்சம் பணி நியமனங்கள், சுகாதாரத் துறை மேம்பாடு என மகாகட்பந்தன் ஆட்சியின் முக்கியச் சாதனைகளுக்குச் சொந்தம் கொண்டாடத் தொடங்கிவிட்டது ஆர்ஜேடி. தேர்தல் களத்தில் இதைச் சொல்லி ஆதரவு திரட்டவும் அக்கட்சி திட்டமிடுகிறது. மொத்தத்தில் மக்களவைத் தேர்தலில் பிஹார் அரசியல் களம்தான் திருப்புமுனையாகியிருக்கிறது.




கனடா – அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# தமிழரசுக்கட்சியை கட்சிக்காரர்களிடம் இருந்து காப்பாற்றுவது யார்?

சில மாதங்களுக்கு முன்பு தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை நினைவு நாள் கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்பட்டடது. அதில் நினைவுரை ஆற்றிய இக்கட்டுரையாசிரியர் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியிருந்தார். இரண்டு தேர்தல்கள் நடந்தால் அவை தமிழ் மக்களின் தோல்வியை வெளிக்கொண்டு வரும் என்று.

ஒன்று தமிழரசுக் கட்சிக்குள் நடக்கும் தேர்தல். இரண்டாவது மாகாண சபைத் தேர்தல்.அண்மையில் தமிழரசுக் கட்சிக்குள் நடந்த தேர்தல் தமிழ் அரசியலின் சீரழிவை வெளிக்கொண்டு வந்திருக்கிறது.

அரசியல் விமர்சகர் ஜோதிலிங்கம் கூறுவது போல தமிழ்மக்கள் மத்தியில் கட்சிகள் கிடையாது, தேர்தலில் வாக்குக் கேட்கும் குழுக்கள் தான் உண்டு என்பது சரியா? ஏனென்றால் கட்சிகளுக்குரிய கட்டுக்கோப்பு, யாப்பு, கூட்டுப் பொறுப்பு என்பன இருந்திருந்தால் பொதுச் செயலாளர் தெரிவில் அப்படி ஒரு குழப்பம் நடந்திருக்காது.

அந்தக் குழப்பம் பின்வரும் விடயங்களை நமக்கு உணர்த்துகின்றது. முதலாவது, தமிழரசுக் கட்சி ஒரு கட்டுக்கோப்பான கட்டமைப்பாக இல்லை. அது சிதைந்து போய் விட்டது. ஒரு பொது முடிவை எடுக்க முடியாத அளவுக்கு கட்சி அதன் கூட்டுணர்வை இழந்து விட்டது. இரண்டாவது சிறீதரனின் தலைமைத்துவத்தை அவருடைய எதிரணி ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் தோல்வியை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. அதாவது தொகுத்துப் பார்த்தால் தமிழரசுக் கட்சி தலைவருக்கான தேர்தலோடு இரண்டாகி நிற்கின்றது.

ஆனால் இது விடயத்தில் தமிழரசுக் கட்சியின் சீத்துவக்கேட்டை விமர்சிக்கும் ஏனைய கட்சிகள் மட்டும் ஜனநாயகக் கட்டமைப்பாக உள்ளனவா? அங்கேயும் பரம்பரைத் தலைவர்கள் கேள்விக்கிடமற்ற நிரந்தரத் தலைவர்கள் என்ற ஏற்பாடுகள் தானே உண்டு? கட்சி மாநாடுகள் வைக்கிறார்கள். ஆனால் திரும்பத் திரும்ப ஒருவரே தலைவராகத் தெரிவு செய்யப்படலாமென்றால் அதன் பொருள் என்ன? கட்சிக்குள் வேறு தலைவர்கள் வரவில்லை என்பதா? அல்லது இருக்கின்ற தலைவர் கடவுளா?

எனவே தமிழரசுக் கட்சியை விமர்சிக்கும் யோக்கியதை ஏனைய கட்சிகளுக்கு கிடையாது. தமிழரசுக் கட்சியைப் பின்பற்றி ஏனைய கட்சிகளும் தமது உயர் மட்டப் பொறுப்புகளை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும். உட்கட்சி ஜனநாயகத்தைப் பாதுகாக்கவில்லையென்றால், தமிழ் அரசியலின் ஜனநாயக இதயத்தைப் பலப்படுத்த முடியாது.

தமிழ் அரசியலின் ஜனநாயக இதயத்தைப் பலப்படுத்தவில்லையென்றால் தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்த முடியாது. ஏனென்றால் தேசியத்தின் இதயம் ஜனநாயகம் தான். தேசியவாதம் தொடர்பான மேற்கத்திய அறிஞர்களின் மேற்கோள்களின்படி, தேசியவாதத்தின் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்க வேண்டும். கட்சிகளுக்குள் ஜனநாயகம் இல்லையென்றால், அவை தங்களைத் தேசியக்கட்சிகள் என்று கூறிக் கொள்வதில் பொருள் இல்லை. எனவே தமிழரசுக் கட்சிக்குள் நடந்த தேர்தல் எல்லா விதமான விமர்சனங்களோடும் முற்போக்கானது.

அது ஜனநாயகத்தின் மீது கொண்ட நம்பிக்கையால்,அல்லது கட்சிக்குள் உட்கட்சி ஜனநாயகம் செழித்தோங்கியிருக்கிறது என்பதற்காக நடத்தப்பட்ட ஒரு தேர்தல் அல்ல.கட்சிக்குள் ஜனநாயகமே இல்லைகூட்டு முடிவுகள் எடுக்கப்படுவதில்லை தனியோட்டங்கள் தான் உண்டு சுமந்திரனும் சம்பந்தரும் தங்களுக்கு இடையே பேசி முடிவுகளை எடுத்தார்கள் சுமந்திரன் யாரையும் பொருட்படுத்தாமல் தனியோட்டம் ஓடினார் என்ற குற்றச்சாட்டுக்கள் பல ஆண்டுகளாக இருந்து வருகின்றன.

ஆனால் சுமந்திரன் கூறுகிறார், கூட்டுப் பொறுப்பு என்று கூறி ஏனைய கட்சி முக்கியஸ்தர்களையும் அழைத்துக் கொண்டு சந்திப்புகளுக்குச் சென்றால், சந்திப்பு முடிவதற்கு இடையில் ஊடகங்களுக்குத் தகவல்கள் கசிய விடப்படுகின்றன என்று. அதாவது கட்சியின் முக்கியஸ்தர்கள் கூட்டுப் பொறுப்புடன் நடந்து கொள்வதில்லை என்று.அவ்வாறு கட்சியின் கூட்டுப் பொறுப்பை சிதைத்தமைக்கு அவருடைய தனி ஓட்டங்கள் தான்



காரணம் என்று கட்சியின் மேல்மட்ட உறுப்பினர்கள் கூறுகிறார்கள். இவ்வாறு கட்சிக்குள் ஜனநாயகம் சிதைந்து போயிருந்த ஒரு கால கட்டத்தில் தலைமைப் பொறுப்புக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்ற நிலைமைகளை சுமந்திரனை உருவாக்கினார். அவர் அதை உருவாக்கக் காரணம் கட்சிக்குள் ஜனநாயகத்தை பலப்படுத்த வேண்டும் என்பதற்காகவா? அல்லது கதிரைகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் சம்பந்தரையும் மாவையும் கதிரைகளை விட்டு அகற்ற வேண்டும் என்பதற்காகவா?

நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால், இருவரையும் கதிரைகளை விட்டு அகற்றுவதற்காகத் தான் சுமந்திரன் ஒரு தேர்தலை நோக்கி நிலைமைகளை நகர்த்தினார் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு தேர்தல் நடந்தால் அதில் தான் வெல்வேன் என்று அவர் உறுதியாக நம்பினார். அதற்குரிய வேலைகளை அவர் ஏற்கனவே செய்து விட்டார். எனவே வெற்றி நிச்சயம் என்று நம்பியபடியால் தான் அவர் தேர்தலை நோக்கி நிலைமைகளை நகர்த்தினார். தனக்கு வெற்றி நிச்சயம் என்பதனால் கட்சியை ஒரேடியாகத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாம் என்று அவர் நம்பினார்.

ஆனால் சிறீதரன் தொடக்கத்திலிருந்து நம்பிக்கை தளராமல் உழைத்தார். கடைசிக் கட்டத்தில் தளம்பிக் கொண்டிருந்த வாக்காளர்கள் தமிழ்த் தேசிய உணர்வுக்குப் பயந்து விட்டார்கள். தமிழ்த் தேசிய உணர்வின் அடிப்படையில் சிறீதரன் வெல்லலாம் என்ற சந்தேகத்தில், குழம்பிக் கொண்டிருந்த வாக்காளர்கள் சுமந்திரனுக்கு எதிராக முடிவெடுத்தார்கள்.

வீட்டுச் சின்னத்துக்கு விழும் வாக்குகள் ஒரு கூட்டுணர்வின் அடிப்படையில் விழும் வாக்குகளே. அக்கூட்டுணர்வு தான் தமது ஆதரவுத் தளம் என்று நம்பும் அரசியல்வாதிகள் அதற்குப் பயப்படுவார்கள். ஆனால் அதற்காக,அதை ஒரு முழுமையான கொள்கை வெற்றியாக வியாக்கியானம் செய்யத் தேவையில்லை. குறிப்பாக இது கட்சிக்குள் நடந்த தேர்தல். இதில் பங்குபற்றியவர்கள் அரசியல்வாதிகள். பொதுமக்கள் அல்ல. அதாவது அரசியல் விலங்குகள் அரசியல் விலங்குகள் கொள்கைக்கு உண்மையாக இருக்கும் என்றெல்லாம் கற்பனை செய்யத் தேவையில்லை.

அது சுமந்திரன் எதிர்பாராத தோல்வி. அவருடைய ஆதரவுத் தளம் நலன்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டது. கட்சிக்குள் நுழைந்ததிலிருந்து அவர் எப்பொழுதும் ஒரு கிங்மேக்கராகவோ அல்லது பட்டத்து இளவரசனாகவோ தான் தன்னைக் கட்டமைத்துக் கொண்டார். அதற்கு சம்பந்தரும் ஆதரவு. கட்சிக்குள் இரண்டாம் மூன்றாம் நிலைகளில் இருப்பதற்கு அவர் பழக்கப்படவில்லை. தோற்கடிக்கப்பட்ட பின் அவரைப் பொறுத்தவரை அவரை விடத் தகுதி குறைந்தவர் என்று அவர் கருதிய சிறீதரனின் கீழ் அவர் செயற்பட வேண்டியுள்ளது. அதற்கு அவருடைய ஈகோ இடம் கொடுக்குமா? மேலும் இத்தோல்வியானது, அவருடைய எதிர்காலத் தேர்தல் தோல்விகளையும் தீர்மானிக்ககூடும். அப்படிப்பட்டதோர் சூழலில் அவர் தேசியப் பட்டியல் ஆசனத்தைக் குறி வைக்கக்கூடும். அதற்கு செயலாளர் அவருடைய ஆளாக இருக்க வேண்டும். அதனால் தான் தன்னைச் செயலாளராக நியமிக்கக் கேட்டிருக்கிறார்.

அது நடக்கக்கூடிய காரியம் இல்லையென்று அவருக்கே தெரியும். ஆனால் அதன் மூலம் கிழக்கில் உள்ள தன்னுடைய ஆளை செயலாளராக நியமிக்குமாறு நிர்பந்திக்கலாம் என்பதை அவர் சரியாகவே கணித்திருந்தார். இது அவர் எதிர்காலத்தில் தேசியப் பட்டியல் ஆசனத்தைக் கைப்பற்றுவதற்கான முஸ்தீபு. அதாவது சுமந்திரன் கட்சிக்குள் தொடர்ந்தும் தனது முதன்மையைத் தக்கவைக்க முற்படுகிறார் என்று பொருள். அவர் சிறிதரனுக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தில் அது தெரிகிறது.

கடிதம் எழுத வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? சிறிதரனோடு அதை நேரடியாக காதும் காதும் வைத்தது போல ஏன் பேச முடியவில்லை? அது இருவரும் தூரமாக இருப்பதைக் காட்டுகின்றதா? அதனை பகிரங்கப்படுத்துவதன் மூலமும் அதை எழுத்தில் முன்வைப்பதன் மூலமும் குறிப்பாக கடிதத்தில் சில சட்ட நுணுக்கங்களைச் சுட்டிக் காட்டுவதன் மூலமும் எதிர்காலத்தில் சிறீதரனின் அணிக்கு எதிராகச் சட்டரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்ற மிரட்டல் அங்கே உண்டா?

கட்சிக்குள் தன்னுடைய முக்கியத்துவத்தைத் தக்கவைக்க முடியவில்லை என்றால் அவர் கட்சிக்கு வெளியே போவாரா? ஒரு புதிய கட்சியை உருவாக்குவாரா? அதாவது தமிழரசுக் கட்சி உடையுமா? சுமந்திரன் ஒரு கிங் மேக்கர் தான். ஒரு கிங்கைப் போல ஒரு புதிய கட்சியைக் கட்டியெழுப்புவாரா?

ஆனால் செயலாளர் தெரிவில் ஏற்பட்ட குழப்பம் மக்கள் மத்தியில் சுமந்திரனுக்குப் பாதகமான விளைவுகளைத் தான் ஏற்படுத்தியிருக்கின்றது. சுமந்திரன் தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்து அளாப்பு

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



கிறார் என்ற அபிப்பிராயம் மேலெழுந்திருக்கிறது. அவர் சிறீதரனுக்கு எழுதிய கடிதம் சாதாரண மக்களை அதிகம் சென்றடையாது. அரசியல் ஈடுபாடுடைய் அரசியல் கட்டுரைகளை வாசிக்கின்றவர்கள் மத்தியில் அதற்கு ஒரு கவனிப்பு இருக்கும். ஆனால் சாதாரண வாக்காளர்கள் சுமந்திரனை ஓர் அளாப்பியாகத் தான் பார்க்கிறார்கள்.

சிறீதரனைப் பொறுத்தவரை அவர் பழைய கூட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்று ஆசைப்படுகிறார். ஆனால் ஏனைய கட்சிகளை ஒருங்கிணைக்க முன்பு அவர் தன்னுடைய சொந்தக் கட்சிக்குள் தன்னுடைய நிலையைப் பலப்படுத்தி கட்சியை ஒரு கட்டிறுக்கமான நிறுவனமாகக் கட்டியெழுப்ப வேண்டியவராகக் காணப்படுகிறார். கட்சி இரண்டாக உடைவதைத் தடுப்பதென்றால் இப்போதைக்கு சுமந்திரன் அணியை அனுசரித்துப் போக வேண்டும்.

கடந்த சில தசாப்தங்களுக்குள் தென்னிலங்கையில் இரண்டு பாரம்பரியக் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏற்கனவே சிதைந்து விட்டன. அது ஈழப் போரின் நேரடி விளைவு. ஆனால் தமிழ்மக்கள் மத்தியில் ஈழப் போரின் நேரடி விளைவாக இரண்டு பாரம்பரிய கட்சிகளும் இப்பொழுதும் அரங்கில் நிற்கின்றன. அவை பண்புருமாற்றத்துக்குத் தயாரா?

பல ஆண்டுகளுக்கு முன் தமிழகம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் யாழ்ப்பாணம் வந்திருந்த பொழுது தனிப்பட்ட சந்திப்பின் போது இக்கட்டுரை ஆசிரியரிடம் சொன்னார்...உங்களுடைய தலைவர்களில் பலர் தீர்ந்து போன சக்திகள்-spent forces-என்று தீர்ந்து போன சக்திகளை வைத்துக் கொண்டு கட்சிகளைப் புதுப்பிக்கலாமா ?

பல தசாப்தங்களுக்கு முன்பு செல்வநாயகம் சொன்னார்...தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று. ஆனால் இப்பொழுது அவருடைய கட்சியை அவருடைய கட்சிக்காரரிடம் இருந்தே காப்பாற்றுவது யார்? எப்படி?

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி சிவமணி பாலசிங்கம்

யாழ்.அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவமணி பாலசிங்கம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 04 பெப்ரவரி 2024 ஞாயிற்றுக்கிழமை ஆகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சிவமணி பாலசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# பின்னிப் பிணைந்த உறவு

இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு கடந்த 26ஆம் திகதி மாலையில், இந்திய ,ல்லத்தில் ஒரு விருந்துபசார நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட முக்கிய அரசியல் பிரமுகர்கள், அமைச்சர்கள் பலரும் அந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். அந்த நிகழ்வில் உரையாற்றிய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, இலங்கையும் இந்தியாவும் எவராலும் பிரிக்க முடியாத தவிர்க்க முடியாத இயற்கையான பங்காளித்துவத்தைக் கொண்டிருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

இரண்டு நாடுகளினதும் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நலன்கள், ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை என்றும் அவர் கூறியிருந்தார். இந்தியாவின் புதிய உயர் ஸ்தானிகராக அண்மையில் பதவியேற்ற சந்தோஷ் ஜாவின் இந்தக் கருத்து, இந்திய உயர் ஸ்தானிகராக கொழும்பில் பணியாற்றிய கோபால்பாக்லே, விடை பெறுவதற்கு முன்னர் கூறிய கருத்தில் இருந்து வேறுபட்டிருக்கவில்லை.

இலங்கை மற்றும் இந்தியாவின் பாதுகாப்பு நலன் கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது என்றும், ஏதாவதொரு நாட்டின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்பட்டால், அது அடுத்த நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் விடைபெற்றுச் செல்வதற்கு முன்னர் கூறியிருந்தார்.

சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி அளிப்பது தொடர்பான சிக்கல், புதுடெல்லிக்கும், கொழும்புக்கும் இடையில், நெருடலாக காணப்பட்ட நிலையில் தான், கோபால் பாக்லே அவ்வாறு கூறியிருந்தார்.

சீனாவின் ஆய்வுக்கு கப்பல்கள் இந்தியாவின் கேந்திர நிலைகளை உளவு பார்ப்பதாக புதுடெல்லி தொடர்ச்சியாக குற்றம்சாட்டி வருகிறது. இவ்வாறான நிலையில் சீனாவின் ஆய்வுக் கப்பல்களுக்கு இலங்கை அனுமதி அளிப்பது இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று புதுடெல்லி உறுதியாக நம்புகிறது.

இத்தகைய ஒரு பின்னணியில் தான், கோபால் பாக்கே, இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அது இந்தியாவுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், இந்தியாவின் நலன்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அது இலங்கைக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டிருந்தார். கிட்டத்தட்ட அதற்கு இரண்டு மாதங்கள் பின்னதாக, இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இலங்கையினதும் இந்தியாவினதும் பாதுகாப்பு மற்றும் அபி ிருத்தி நலன்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது என்று கூறியிருக்கிறார். இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இலங்கையையும் இந்தியாவையும் இயற்கையான பங்காளிகளாக அறிமுகப்படுத்துகிறார்.

இயற்கையான பங்காளிகள் என்னும் போது தவிர்க்க முடியாத கூட்டாளிகளாக கருதுகின்ற நிலையே காணப்படுகிறது. அயல்நாடுகள் எல்லாம் இயற்கையான பங்காளிகளாக இருக்க முடியாது. அயல் நாடுகள் பகையாளி நாடுகளாக இருக்கின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்புகளைப் பார்த்தால், இராமாயண காலத்தில், பகை இருந்திருக்கிறது. சோழர்களும் இலங்கையின் மீது படையெடுத்திருக்கிறார்கள். ஆக இலங்கையின் மீது இந்தியாவின் படையெடுப்பும் பாதுகாப்புத் தாக்கமும் என்றைக்கும் இருந்து வந்திருக்கிறது.

இந்தியாவைப் பொறுத்த வரையில், இலங்கையில் இருந்து படையெடுப்புக்களை எதிர் கொள்ளாவிடினும், இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கை முக்கியமானதென வரலாற்றுக் காலத்திலும் நம்பப்பட்டிருக்கிறது. அதனால் தான் சோழ மன்னர்களால் இலங்கை மீது படையெடுப்புகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.




தற்போதைய பாதுகாப்புச் சூழல்களில் இந்தியாவுக்கு இலங்கை இன்னும் முக்கியமானதாக மாறியிருக்கிறது.

இலங்கையில் பிறநாடு தளம் அமைப்பது அல்லது இலங்கையை தங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டதாக மாற்றுவது இந்தியாவுக்கு நேரடியான பாதிப்பை ஏற்படுத்தும். குறிப்பாக, சீனாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகரித்து வருவது இந்தியாவைப் பொறுத்த வரையில் கவலைக்குரிய ஒரு விடயமாக மாறியிருக்கிறது.

2007ஆம் ஆண்டுக்கு பின்னர், குறிப்பாக அம்பாந்தோட்டையில், துறைமுகத்தை அமைக்க தொடங்கியதன் பின்னர், இந்தக் கவலை இந்தியாவுக்கு ,ன்னும் அதிகமாகியுள்ளது. தற்போது அம்பாந்தோட்டைத் துறைமுகம், சீனாவில் நீண்டகால தளமாக மாறியிருக்கிறது.

கொழும்பு துறைமுக நகரம் சீனாவின் மற்றொரு ஆளுகை மையமாக உருவாகி வருகிறது. கொழும்பு துறைமுகம் மற்றும் பல இடங்களில் சீனாவின் முதலீடுகள் விரிவடைவது, பொருளாதார ரீதியான அதன் தலையீட்டை உணர்த்துகிறது. இத்தகைய நிலையில் இந்தியா தனது பாதுகாப்பு குறித்து கவலை கொள்ளாமல் இருக்க முடியாது.

இந்தியாவைப் பொறுத்த வரையில் இலங்கையில் தனது செல்வாக்கை உறுதிப்படுத்த கிடைத்த வாய்ப்புகளை நழுவ விட்டு விட்டது. இலங்கையில் போர் நடந்த காலப்பகுதியில் இந்தியா, எடுத்த முடிவுகள் இந்தியாவில் நீண்ட கால பாதுகாப்பு நலன்களை உறுதி செய்ய போதுமானவையாக இருக்கவில்லை.

இலங்கையின் இறைமை மற்றும், பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தினால், அது இந்தியாவினுடைய இறைமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற ஒரு வழி சிந்தனையை மாத்திரமே, இந்தியா கவனத்தில் எடுத்திருந்தது. மாறாக, தமிழர் பிரச்சினைக்கு தீர்வை தரக்கூடிய நிரந்தரமான ஒரு வழியை இந்தியா தேடியிருந்தால், தமிழர்களுக்கு சாதகமான நிலைப்பாடு ஒன்றை இந்தியா எடுத்திருந்தால், நிலையான பாதுகாப்பு கவசத்தை ஏற்படுத்தியிருக்க முடியும். அதற்குப் பதிலாக தமிழர்களைப் பலவீனப்படுத்தி, கொழும்பை வசப்படுத்தலாம் என்ற இந்தியாவின் கணிப்பு அதற்கு இப்போது பாதுகாப்பு அச்சுறுத்தலாக மாறியிருக்கிறது.

இனி கடந்த காலத்துக்கு செல்வதில் அர்த்தமில்லை. ஆனால், கடந்த கால படிப்பினைகளின் ஊடாக இந்தியா பாடங்களை கற்க வேண்டிய நிலையில் இருக்கிறது. சிங்கள ஆட்சியாளர்கள் ஒரு போதும் இந்தியாவை இயற்கையான பங்காளி என்று கருதுவதில்லை. இந்தியா தொடர்பான அச்சம் அவர்களுக்கு என்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. இலங்கையை இந்தியா தங்களின் ஒரு மாநிலம் ஆக்கி விடும் என்ற பயம் சிங்கள பேரினவாதிகள் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் எப்போதும் இருந்து வருகிறது. இந்தப் பயத்தை போக்குவதற்கு மாத்திரமே இந்தியா விரும்புகிறது.

அதன் மூலம் சிங்கள ஆட்சியாளர்களின் நெருங்கிய உறவை தக்க வைத்துக் கொள்ளலாம் என இந்தியா எப்போதும் கருதி வந்திருக்கிறது. இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா கூறிருப்பதும் அதன் அடிப்படையிலான விடயம் தான். திரும்பத் திரும்ப இந்திய தூதுவர்களும் ஆட்சியாளர்களும் இலங்கைக்கு அதனை கூறிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அதற்கு ஒரே காரணம் இலங்கையின் ஆட்சியாளர்கள் தங்களை முழுமையாக நம்பவில்லை என்று இந்தியா புரிந்து கொண்டிருப்பது தான்.

அதைவேளை, இந்தியாவின் நலன்களை புறக்கணிக்காத அதற்கு அச்சுறுத்தலாக இருக்காத தரப்பாக தமிழர்கள் இருந்தாலும், அவர்களுடன் இந்தியா மட்டுப்படுத்தப்பட்டளவு ஊடாடல்களையே வைத்துக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் பாதுகாப்பு இப்போது சிக்கலான கட்டம் ஒன்றை அடைந்திருக்கிறது. குறிப்பாக சீனாவின், ஆதிக்கம் இந்தியப் பெருங்கடலில் வலுவடைந்து வரும் சூழலில், இலங்கையை நம்பி தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய நிலையில் இந்தியா இருக்கிறது. இதனால் ,ப்போது, கொழும்புடன் சமரசம் செய்ய வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாக காணப்படுகிறது. சீனாவுடன் சேர்ந்து கொண்டு மாலைதீவு இப்போது இந்தியாவுக்கு சவால் விடுகின்ற போதும், இந்தியா வெளிப்படையான எதிர்ப்பை காண்பிக்கவில்லை.



கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்




காரணம் மாலைதீவை விட, இலங்கை போன்ற நாடுகளின் தயவு இந்தியாவுக்கு அதிகம் தேவைப்படுகிறது. இலங்கையை பொறுத்தவரையில் இந்தியாவுக்கு அதிக எதிர்பார்ப்பும் உள்ளது. பாதுகாப்பில் மாத்திரமன்றி அபிவிருத்தியிலும் இது முக்கியமானது. அதனால் தான் இந்தியா இப்போது இலங்கையில் தனது முதலீடுகளை விரிவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

இந்தக் கவனம் புதுடெல்லியின் இராஜதந்திர முயற்சிகளில், முதன்மையானதாக மாறி இருக்கிறது. இந்தியாவும் இலங்கையும் விரைவில் பெரும் தேர்தல்களை எதிர்கொள்ள உள்ள சூழ்நிலையில் இரண்டு நாடுகளும் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நலன்களில் தங்களுக்கிடையில் உள்ள, தொடர்புகளை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்காது. இதனை நிலை நிறுத்துவதற்காக இந்த உறவுக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய விடயங்களில் விட்டுக் கொடுப்புகளுக்கும் சமரசங்களுக்கும் தயாராக இருக்கும்.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தமிழரசுக்கட்சிக்குள் சுமந்திரனின் தோல்வி எவ்வாறு நிகழ்ந்தது?



கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவிற்கான போட்டியில் சிவஞானம் சிறிதரன் வெற்றி பெற்றதை விடவும் சுமந்திரன் தோல்வியடைந்ததே பலருக்கும் ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் சுமந்திரன் வெற்றி பெறுவார் என்றே பலரும் எதிர்பார்த்திருந்தனர். சிறிதரனா அல்லது சுமந்திரனா என்றால் ஒருவர் சுமந்திரனை நோக்கித் தான் திரும்புவார். ஆனால், அவ்வாறு நிகழவில்லை.

சுமந்திரனை விடவும் அதிக வாக்கு வித்தியாசத்தில் சிறிதரன் வெற்றி பெற்றிருக்கின்றார். இது எவ்வாறு நிகழ்ந்தது? சம்பந்தனின் கண்டு பிடிப்புத் தான் சுமந்திரன். 2010 இல் தேசிய பட்டியல் மூலம் சுமந்திரன் தமிழர் அரசியலுக்கு அறிமுகமானார். சம்பந்தனின் அரசியல் நகர்வுகளுக்கு புலமைத்துவ உதவிகளை வழங்கும் ஒருவராகவே சுமந்திரன் இருந்தார். ஆனால் 2015 இல் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் தமிழரசுக் கட்சியிலும் சுமந்திரன் தவிர்க்க முடியாத இடத்தை பெற்றுக் கொண்டார். சம்பந்தனுக்கு நிகரான முக்கியத்துவத்தை அவர் வகிக்கவும் தொடங்கினார். இந்தப் பின்புலத்தில் தான் இலங்கை தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைமைத்துவம் தொடர்பான எண்ணங்கள் கருக் கொண்டன. சுமந்திரன் போன்ற ஒருவர் அவ்வாறு சிந்திப்பதில் தவறுகள் ஏதுமில்லை. ஏனெனில் தமிழாகக் கட்சியை பொறுந்தவரையில் சம்பந்தனுக்கு அடுத்தது யார் என்று கேட்டால், சுமந்திரனை தவிரவும் பிறிதொருவரை காண்பிக்கக் கூடிய ளவிற்கு எவரும் இருந்திருக்கவில்லை. சிறிதரனை இந்த இடத்தில் எவருமே ஒருபோதுமே சிந்தித்ததும் இல்லை.

ஆனால் 2020 பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் தான் சிறிதரனது தலைவர் .ஆசை வெளியில் முகம் காட்டியது. தலைமைத்துவத்திற்கு தகுதியுள்ள ஒருவர் தான் என்னும் எண்ணம் சிறிதரனுக்குள் வலுவடைந்தது. ஒருவரது தலைமைத்துவ எண்ணம் அவருக்குள் கருக்கொண்டால் மட்டும் தான் அது வெளிப்படும்.

2020 பாராளுமன்றத் தேர்தலின் போது சிறிதரனும் சுமந்திரனும் இணைந்தே பணியாற்றியிருந்தனர். சிறிதரனின் ஆதரவுடன் தான் கமந்திரன் வெற்றி பெற்றதான பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டன. கிளிநொச்சியில் இடம் பெற்ற நேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் பேசுகின்ற போது, சுமந்திரன், பாலசிங்கம் போன்ற ஒருவர் என்று சிறிதரன் பேசியிருந்தார், இதன்மூலம் அவரது ஆற்றல் எங்களுக்கு வேண்டும் என்பதுதான் அவர் எடுத்துரைக்க முற்பட்ட விடயம்.

இதன் மூலம் சுமந்திரனை தான் ஆதரிப்பதை அவர் நியாயப்படுத்தியிருந்தார். ஆனால் உண்மையிலேயே சிறிதரன் இவ்வாறு பேசுகின்றபோதே அவருடைய தலைக்குள் தலைவர் ஆசை ஆழமாக குடிபுகுந்திருக்க வேண்டும். இதனை ஒருவேளை சுமந்திரன் புரிந்து கொள்ளாமலும் இருந்திருக்கலாம். ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பாலசிங்கத்தின் பொறுப்பு வெறும் தத்துவ ஆசிரியர் மட்டும் தான். அதைப் போன்று, தங்களுக்கு ஆலோசனை வழங்குவது மட்டும் தான் சுமந்திரனின் வேலை என்பதைத் தான் சிறிதரன் மறைமுகமாக குறிப்பிட்டாரோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

அதேவேளை சுமந்திரன் தனது தேர்தல் வெற்றிக்காக சிறிதரனை நாடிச் சென்றது தான் சுமந்திரனுக்கு போட்டியான ஒருவராக வரமுடியும் என்னும் நம்பிக்கை சிறிதரனுக்குள் விதைத்திருக்க வேண்டும். இது இயல்பானதும் கூட. ஏனெனில், சுமந்திரன் தனித்து வெற்றிபெற முடியாதளவிற்கு பலவீனமாக இருக்கின்றார் என்றால் அவரால் எவ்வாறு கட்சிக்குள் பரவலான ஆதரவை இலகுவாக பெறமுடியும் என்னும் கேள்வி சிறிதரனுக்குள் தலைமை ஆசையை தூண்டியிருக்கலாம். சுமந்திரனை விழுத்த வேண்டும் என்னும் எண்ணம் கொண்டவர்கள் பலரும் சிறிதரனை சுற்றி வட்டமிருக்கலாம். இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் சிறிதரன் பலமான போட்டியாளரானார். சுமந்திரனுக்கு எதிரானவர்களின் ஒரேயொரு தெரிவாக சிறிதரன் மாறிய பின்னர் நிலைமைகள் வேகமாக மாற்றமடைந்தன. இந்த மாற்றங்களை சுமந்திரனால் துல்லியமாக மதிப்பிட முடிந்ததா?

சுமந்திரனை சுற்றியிருந்தவர்கள் ,ந்த மாற்றங்களை புரிந்து கொள்ளக் கூடியளவிற்கு ஆற்றலுள்ளவர்களாக இருந்தனரா? சுமந்திரன் நம்பியவர்கள் பலர் சுமந்திரனுக்கு கைகொடுத்தனரா? கேள்விகள் அனைத்துக்குமான பதில் இல்லை என்பது மட்டும் தான். கிழக்கு மாகாணத்தில் சுமந்திரன் எதிர்பார்த்தவாறு அவர் ஆதரிக்கப்படவில்லை. உண்மையில் கிழக்கு மாகாணத்தில் தான் சுமந்திரன் அதிக ஆதரவை பெற்றிருக்க வேண்டும்.

ஏனெனில் ஒப்பீட்டடிப் படையில் கிழக்கு மாகாணம் வடபுல தமிழ் தேசியவாத கதைகளுக்குள் அமிழ்ந்து கிடக்கவில்லை. இதற்கு ஒரு உதாரணத்தை கூறமுடியும். 2015 இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, கிழக்கு மாகாண சபைக்கு தமிழர் ஒருவரை முதலமைச்சராக கொண்டுவர வேண்டும் என்னும் குரல் வலுவடைந்தது. அப்போது சிங்கள வர்களோடு இணைந்தாவது அதனைப் பெறுவதில் தவறில்லை என்று கூட கிழக்கின் மத்தியதர வர்க்கம் சிந்தித்தது.

இவ்வாறானதொரு பின்புலம் கொண்டு மாவட்டங்களில் வாழும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் சுமந்திரனைத் தான் ஆதரிந்திருக்க வேண்டும். அத்துடன், சுமந்திரன் கிழக்கு மாகாணத்தின் பிரச்சினைகள் தொடர்பில் களத்தில் நிற்கும் ஒரேயொரு வடபுல பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கின்றார். திருகோணமலை, மட்டக்களப்பு. அம்பாறை பகுதிகளில் காணி மற்றும் மனிதஉரிமை விவகாரங்களில் சட்ட உதவியென்று அழைக்கும் போதெல்லாம், அந்த இடங்களுக்கு செல்பவராக இருந்திருக்கின்றார். ஆனால் சிறிநரன் ஒப்பீட்டடிப்படையில் கிழக்கு மாகாண கட்சியினரோடு நெருங்கிய உறவைக் கொண்டிருந்த ஒருவரல்ல. ஒரு சில தனிப்பட்ட உறவுகளையே வைத்திருந்தார். இந்தப் பின்புலத்தில் நோக்கினாலும் கூட,சுமந்திரனைத் தான் கிழக்கு மாகாண தமிழரகக் கட்சியினர் முழுமையாக ஆதரித்திருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை திருகோணமலையில் ஒரு சிறியளவு எண்ணிக்கையானோர் மட்டுமே சுமந்திரனை ஆதரித்திருக்கின்றனர். சுமந்திரனை ஆதரிப்பதற்கான நியாயமான, பெருமளவான காரணங்கள் இருந்த போதிலும் கூட, அவரால் வெற்றி பெற முடியவில்லை. இப்போதும் கூட, சுமந்திரன் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறுவாரானால் ஒரு நாளிலேயே தமிழரசுக் கட்சி அதன் பெறுமதியை இழக்கும். ஏனெனில் அந்தளவிற்கு சுமந்திரனுக்கு நிகரான ஒருவர் கட்சிக்குள் இல்லை. இவை அனைத்தையும் மீறி எவ்வாறான காரணங்கள் சுமந்திரனை தோற்கடித்தன?

சுமந்திரன் தமிழ் தேசிய அரசியலாக அடையாளப்படுத்தப்படும் அரசியல் சூழலை சரியாக மதிப்பிடத் தவறினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது அடிப்படையில் இயக்கத்தினால் வழி நடத்தப்பட்ட ஒரு பலவீனமான கூட்டமைப்பு. அது அவ்வாறு பலவீனமாக இருக்க வேண்டும் என்பது தான் புலிகளின் விருப்பமாகவும் இருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்னும் யோசனையை சில கட்சிகள் வன்னியிடம் முன் வைத்த போதும் கூட, அதனை புலிகளின் தலைமை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் ஒரு சுயாதீனமான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை புலிகள் விரும்பவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் புலிகளின் அழிவுக்குப் பின்னர் ஏகபோக தலைமைத்துவப் பொறுப்பை சம்பந்தன் எடுத்துக் கொண்டார்.

தனது ஏகபோகத்தை நிலை நாட்டிக் கொள்ளும் நோக்கிலேயே திட்டமிட்டு காய்களையும் நகர்த்தினார். அவரது காய் நகர்த்தவின் பிரதானமானது தான் வெளியிலிருந்து புதியவர்களை கொண்டு வருவது. இந்தப் பின்புலத்தில் தான் சுமந்திரன் அரசியலுக்குள் கொண்டு வரப்பட்டார். உண்மையில் சுமந்திரன் விடுதலைப்புலிகளை எதிர்க்கும் நிகழ்ச்சி நிரலுடன் வந்திருப்பார் என்று இந்தக் கட்டுரையாளர் நம்பவில்லை. ஏனெனில் அதற்கான எந்தவொரு தேவையும் சுமந்திரனுக்கு இல்லை.

ஆனால் சம்பந்தனிடம் அது இருந்தது. 2012ஆம் ஆண்டு சம்பந்தன் ஆற்றிய பாராளுமன்ற உரையொன்றின் போது விடுதலைப்புலிகள் இயக்கம் உருவானதற்கு நியாயமான காரணங்கள் இருந்தது. ஆனால் புலிகள் – அப்பாவி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை கொன்றார்கள், பல சிவிலியன் தலைவர்களை கொன்றார்கள், எனது நல்ல நண்பரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை உலகெங்கும் முடக்குவதற்கு காரணமாக இருந்தவருமான லக்க்ஷ்மன் கதிர்காமரை கொன்றார்கள். இப்படியான காரணங்களால் தான் விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கமாக அடையாளம் காணப்பட்டது என்றார்.

ஆனால் இவ்வாறானதொரு தொனியில் சுமந்திரன் எங்குமே பேசியநில்லை. ஆனால் சுமந்திரனை தமிழ் தேரியத்திற்கு எதிரானவராக நோக்கியவர்கள் எவருமே சம்பந்தனை எதிர்க்கவில்லை. சம்பந்தனின் தவறுகளைக் கூட சுமந்திரன் என்னும் பெயருக்கு ஊடாகவே புரிந்து கொண்டனர். இந்த விடயங்கள் தொடர்பில் சுமந்திரன் சிந்திக்கவில்லை. எவர் என்னவும் நினைக்கட்டும், நான் எனது வழியில் தான் செல்வேன் என்னும் போக்கிலேயே செயற்பட்டார். அந்த அடிப்படையிலேயே பேசினார். தொடர்ந்தும் சம்பந்தனை நியாயப்படுத்தும் பணியையே முன்னெடுத்தார். ஒரு வகையில் சம்பந்தனின் பழி பாவங்கள் அனைத்தையும் சுமக்கும் ஒருவராகவே சுமந்திரன் இருந்திருக்கின்றார்.

சம்பந்தனுக்காகவே பங்காளிக் கட்சிகளுடன் சுமந்திரன் முரண்பாடுகளை வளர்த்தார். தனிப்பட்ட ரீதியில் சுமந்திரனுக்கு அவ்வாறான தேவைகள் இருந்திருக்கவில்லை. ஆனால் தன்னை அரறியலுக்கு கொண்டு வந்த சம்பந்தனுக்கு மட்டுமே தான் விசுவாசமானவராக இருக்க வேண்டும் என்னுமடிப்படையிலேயே சுமந்திரன் தன்னை குறுக்கிக் கொண்டார்.

ஆனால் சம்பந்தனுக்காக, தமிழரசுக் கட்சிக்காக பலரையும் தேவையில்லாமல் எதிரியாக்கிய சுமந்திரனை, இறுதியில் அவரது கட்சி தோற்கடித்து விட்டது. இது சுமந்திரனுக்கு சில உண்மைகளை உணர்த்தியிருக்கலாம். சுமந்திரன் தமிழ் தேசியத்தோடு நிற்க மாட்டார் என்பதே சிறிதரனின் அடிப்படையான பிரசார உக்தியாக இருந்தது. திருகோணமலையிலுள்ள தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சிலர் ந்தக் கட்டுரையாளரோடு பேசுகின்ற போது ஒரு விடயத்தை குறிப்பிட்டனர். ஆரம்பத்தில் அனைவருமே சுமந்திரனுக்கு வாக்களிப்பதாகவே இருந்தனர். ஆனால் சிறிதரன் ஒவ்வொருவரது வீடுகளுக்கும் சென்ற போது நிலைமைகள் மாற்றமடைந்தன. இரண்டு அணிகளாக உடைவுற்றது. குறிப்பாக சில தொகுதிகளிலுள்ள உறுப்பினர்கள் தமிழ் தேசியக் கதைகளால் குழப்பமடைந்தனர் என்று குறிப்பிட்டனர்.

இரண்டாவது காரணம், சுமந்திரன் வெற்றி பெற்றால் தங்களில் பலருக்கு நெருக்கடி. வரலாமென்று மட்டக்களப்பைச் சேர்ந்த கட்சி உறுப்பினர்கள் சிலர் எண்ணியிருப்பது போன்று தெரிகின்றது. இதற்கு முக்கிய காரணம் சாணக்கியனுக்கு சுமந்திரன் கொடுத்த முக்கியத்துவம். உண்மையில் சாணக்கியனை அரசியலுக்குள் கொண்டு வந்தது மாவை சேனாதிராஜா. சாணக்கியன் போன்றவர்களை உள் வாங்க வேண்டாமென்று சம்பந்தனும் கூறவில்லை. சம்பந்தனும் அவ்வாறானவர்களைத் தான் விரும்பினார். ஆனால் சாணக்கியன் வெற்றி பெற்றதும் சுமந்திரனோடு நெருங்கிக் கொண்டார். சாணக்கியனை அரசியலுக்குள் கொண்டு வந்ததை மட்டக்களப்பின் (22ம் பக்கம் பார்க்க)

# விதியே விதியே தமிழ்ச்சாதியை என் செய நினைத்தாய்?

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகச் சிவஞானம் சிறிதரன் தெரிவு செய்திருப்பதை அடுத்து அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறு கருத்துகள் முன் வைக்கப்படுவதொன்றும் புதியதுமல்ல. பெரியதுமல்ல. அரசியற் கட்சிகளின் விடயங்கள் என்றால் பொதுப்பரப்பில் அதைப்பற்றிய உரையாடல்கள் நிகழ்வதுண்டு. ஆகவே இதொரு சாதாரணமான விடயம். ஆனால், இதைக் கடந்து இந்தக் கருத்துகளின் பின்னால் செயற்படுகின்ற உளநிலையும் அரசியற் காரணங்களும் முக்கியமானவை. இதற்கு அடிப்படையாகச் சில காரணங்கள் உண்டு.

1.இதற்கு முன்னெப்போதும் தமிழரசுக் கட்சியின் தலைமைக்கான போட்டி இப்படிப் பகிரங்க வெளியில் நடந்ததில்லை. இப்போது தான் அது முதற் தடவையாக இந்த நிலைமையைச் சந்தித்திருக்கிறது. அதற்குக் கட்சிக்குள் நிலவும் உட் பலவீனங்கள் காரணமாகும். ஆனாலும் இதொரு சாதாரணமான உட்கட்சி விடயமே. இதைப் போல,தமிழ்நாட்டில் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், இலங்கையில் ஐ.தே.க, சு.க போன்ற பெருங் கட்சிகளுக்கும் தலைமைப் போட்டிகள் நடந்ததுண்டு. சில ஆண்டுகளுக்கு முன்பு ஈ.பி.ஆர்.எல். எவ் தலைமைப் போட்டியில் நீதிமன்றம் வரையில் சென்றது. அப்படிச் சில கட்சிகளுக்குள் சில சந்தர்ப்பங்களில் நிகழ்வது வழமை. கட்சியின் அரசியல் யாப்பே இதை உரைக்கிறது. இதையெல்லாம் உணர்ந்து கொள்ளாமல் அல்லது இதைத் தெரிந்து கொண்டும் இந்தப் போட்டியை ஏதோ தேசிய அளவிலான ஒரு போட்டி போலக் காட்டியதால் ஊதிப் பெருப்பித்ததால் ஏற்பட்டதே இந்தப் பரபரப்பு.

2.இதைப் பெரிய விவகாரமாக்கி, ஊதிப் பெருப்பிக்கக் காரணமாக இருந்த தரப்புகள், ஊடகங்களும் தமிழ்ப் பத்தியாளர்களுமாகும். காரணம், ஏற்கனவே இருக்கின்ற தமிழ்த்தேசிய அரசியற் கட்சிகளிடத்தில் காணப்படுகின்ற போதாமை உணர்வே இந்தத் தரப்புகளை தமிழரசுக் கட்சியின் தலைமைப் போட்டியின் மீது கவனத்தை உண்டாக்கியது. ஏற்கனவே தலைமைப் பொறுப்பிலிருந்த மாவை சேனாதிராஜாவும் கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் திரு. சம்பந்தனும் முதுமை மற்றும் செயலின்மை காரணமாக கட்சியையும் அரசியலையும் மந்த நிலைக்குள்ளாக்கி விட்டனர் என்று பலராலும் கருதப்பட்டது.

மறுபக்கத்தில் கஜேந்திரகுமார், விக்கினேஸ்வரன், சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் தமிழ்த்தேசியவாத அரசியலைத் தீவிரமாகப் பேசினாலும் அதற்கான கட்டமைப்பு செயற்பாட்டு விளைவு போதாதிருக்கிறது என்ற உணர்வு பலரிடத்திலும் காணப்பட்டது.

அந்தப் போதாமை உணர்வென்பது எதிர்ப்பரசியலின் மீதான நாட்டத்தினால் ஏற்பட்டது. ஆக இன்று ஈழத்தமிழ் அரசியல் வெளியானது எதிர்ப்பரசியலிலேயே மையம் கொண்டுள்ளது. அதனுடைய விளைவே இதுவாகும்.

3. இன்னொரு நிலையில் இன்னொரு சாரார், தீவிர எதிர்ப்பரசியலுக்குப் பதிலாக மென்போக்கான முறையில் பலரோடும் பேசக்கூடியவாறு தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். அவர்களே சம்மந்தன், சுமந்திரன், சாணக்கியன் போன்றோரை ஆதரிக்கின்றனர். ஆனாலும் அந்தத் தரப்பு பொதுவெளியில் இன்னும் பலமடையவில்லை.

4. ஆகவே மென்போக்கான முறையில் பன்மைத்துவத்தோடு கட்சியின் கொள்கையைக் கொண்டு செல்ல வேண்டும் என்று ஒரு சாராரும் (சுமந்திரனை ஆதரிப்போர்) அப்படியல்ல, தமிழரின் அரசியலை, விட்டுக் கொடுப்புகளற்ற முறையில் தீவிரமாக முன்னெடுக்க வேண்டும் என்று மறுசாராரும் (சிறிதரனை ஆதரிப்போரும்) கருதுவதால் ஏற்பட்டுள்ள எதிரெதிர் முனைப்புகளால் இந்தப் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



5.எப்போதும் சர்ச்சைக்குரிய அரசியல் வாதியாகவே சிறிதரன் இருப்பதாகும். மட்டுமல்ல, கட்சிக்கு உள்ளும் வெளியிலும் ஒரு தொகுதியினரின் எதிர்ப்புகள் அவருக்கு உண்டு என்பதால் ஏற்பட்ட அலைகள். அதைப் போல அவரைத் தீவிர நிலையில் ஆதரிப்போரும் உண்டு. இதனால் உண்டாகும் உள் வெளி முரண்கள் வெளித் தெரிகின்றன.

6.சிறிதரன் முன்னெடுக்க முயற்சிக்கின்ற அரசியலானது, கஜேந்திரகுமார் முன்னெடுத்து வரும் அதிதீவிரவாத அரசிலை ஒத்திருப்பதால், இரண்டு அரசியற் தரப்புகளுக்குமிடையில் முன்னரைப் போல (இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் — இலங்கைத் தமிழரசுக் கட்சி மோதல் அல்லது ஜீ.ஜீ.பொன்னம்பலம் — எஸ்.ஜே.வி. செல்வநாயகம் மோதல்) இரு தரப்புப் போட்டிகள், உரசல்கள், மோதல்களைக் கொண்டிருக்கும் என்பது. இதனுடைய விளைவுகள் அவ்வளவு நல்லதாக அமையாது என்ற உணர்வினால் எழும் அச்சம் இந்த விவாதங்களைக் கிளப்பியுள்ளது.

7 சிறிதரன் முன்னெடுக்க விரும்பும் அரசியலானது, தமிழரசுக் கட்சியின் காலாவதியாகப் போன அரசியல் மட்டுமல்ல, விடுதலைப் புலிகளின் தொடர்ச்சி போன்ற பாவனையைக் கொண்டிருக்கிறது என்ற தோற்றப்பாட்டைக் கொண்டது என்பதால் இரண்டும் நிகழ்காலத்திற்கோ எதிர்காலத்திற்கோ உரியதல்ல என்பதால் எழுந்துள்ள கருத்துகள்.

8.புலிகளைப் போற்றிப் பாடித் தன்னுடைய அரசியல் வழிமுறையை முன்னெடுப்பதாகக் காட்டிக் கொண்டாலும் புலிகள் மேற்கொண்ட அரசியற் கொள்கை, அவர்களுடைய செயற்பாடுகள், அவர்கள் உருவாக்கிய நடைமுறை போன்றவற்றுக்கு அப்பாலேயே சிறிதரன் நிற்கிறார் என்பது அதாவது அவர் புலிகளின் பிரதிநிதி போல நாடகமாடுகிறார் என்பது. இல்லையென்றால் குறைந்த பட்சம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள், அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கான இடம் இனி அளிக்கப்படுமா என்று எழுகின்ற கேள்வி.

9 விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியைப் பேணும் அரசியலுக்கு தென்னிலங்கையிலும் பிராந்திய ரீதியாக இந்தியா, சீனா மற்றும் சர்வதேச ரீதியில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகின் அங்கீகாரமும் கிடைக்குமா என்ற கேள்விகள். இவ்வாறு பல கேள்விகளும் அடிப்படைக் கருத்து நிலைகளும் தமிழரசுக் கட்சியின் மீதும் அதனுடைய தலைமை (சிறிதரனின்) மீதும் முன்வைக்கப்படுகின்றன. ஈழத் தமிழரின் அரசியல், ஆயுதப் போராட்டத்துக்கு முன்பும் ஆயுதப் போராட்டத்துக்குப் பின்பும் தமிழரசுக் கட்சியின் கைகளில்தான் இருந்தது, இருக்கிறது. அதற்கான தகுதி அதற்கு இருக்கிறதோ இல்லையோ வரலாற்றுச் சூழல் அப்படித் தான் அமைந்துள்ளது. இதற்கு இன்று தமிழ் அரசியல் பரப்பிலுள்ள ஏனைய சக்திகளின் பலவீனமும் ஒரு காரணமாகும்.

விடுதலைப் புலிகளால் பல கட்சிகளையும் இயக்கங்களையும் இணைத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்பு உருவாக்கப்பட்டாலும் அதற்குத் தமிழரசுக்கட்சியே தலைமை தாங்கும் நிலை வளர்ந்தது. இதற்கு மாறாக தமிழரசுக் கட்சியின் திமிர்த்தனத்தினால் (ஜனநாயக முரண்பாடுகளால்) ஏனைய கட்சிகள் வெளியேறினாலும் அவற்றினால் தமிழரசுக் கட்சியை மீறி நிற்க முடியவில்லை. இவ்வளவுக்கும் தமிழரசுக் கட்சியின் பாரம்பரியத் தொடர்ச்சியைக் கொண்டவர்கள் இன்றில்லை. புதியவர்களே அதற்குத் தலைமை ஏற்றுள்ளனர். இருந்தும் ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களால் (அவர்களுக்கு நீண்டதொரு செயற்பாட்டு அரசியற் பாரம்பரியம் — விடுதலை இயக்க அரசியல் வழித் தொடர்ச்சி இருந்தாலும்) தமிழரசுக் கட்சியின் இந்தப் புதிய முகங்களை எதிர்கொள்ள முடியாமலே உள்ளனர்.

இவ்வளவுக்கும் தமிழரசுக் கட்சி செயற்பாட்டுத் தளத்தில் மிகப் பலவீனமானது. அதற்கு 75 ஆண்டுகாலப் பாரம்பரியமிருந்தாலும் அதனால் நிகழ்கால அரசியலையோ எதிர்காலத்துக்கான அரசியலையோ முன்னெடுக்கக் கூடிய சிந்தனைத் திறன் (கொள்கை), செயற்பாட்டுத் திறன் எதுவும் இல்லை. தமிழ் மக்களுடைய அரசியல் விடுதலைக்கும் சமூக மேம்பாட்டுக்கும் எந்த வகையிலும் பயன்தராத, பங்களித்திருக்காத, பங்களிக்கவே முடியாத நிலையில் தான் அது இன்னமும் உள்ளது. உண்மையில் திரு. தந்தை செல்வநாயகம் காலத்துக்குப் பிறகு அது தேவையற்ற ஒன்றாக ஆகிவிட்டது. அதாவது அது காலாவதியாகி (Expired) விட்டது. அதைச் செல்வநாயகமே தமிழ் மக்களை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று பகிரங்கமாக வெளிப்படுத்தியுமிருந்தார். அதைச் சற்று வேறு விதமாக்கி தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற புதிய லேபிளில் வைத்திருந்தார் திரு. அ. அமிர்தலிங்கம். அதுவும் பின்னர் செல்லாக் காசாகி விட்டது.

விடுதலைப்புலிகள் தம்முடைய அரசியல் தேவைக்காக தாம் ஏற்றுக் கொள்ளாமல் வெளியே தள்ளி வைத்திருந்த தமிழ்க்கட்சிகளையும் இயக்கங்களையும் தற்காலிகமாகப் பயன்படுத்த விளைந்ததன் விளைவாக மீண்டும் செயற்கைச் சுவாசமளிக்கப்பட்டு அரங்குக்குக் கொண்டு வரப்பட்டதே தமிழரசுக் கட்சி.

அவர்கள் கூட முதலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தையே பயன்படுத்தினார்கள். திரு. வீ. ஆனந்தசங்கரியுடன் ஏற்பட்ட பிணக்கையடுத்தே தமிழரசுக் கட்சியின் வீடு சின்னம் புலிகளால் பயன்படுத்தப்பட்டது.

புலிகளின் வீழ்ச்சிக்குப் பிறகு அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி அரசியல் செய்து வருகிறது தமிழரசுக் கட்சி. ஆயினும் அதனுடைய பலவீனங்கள் அதை வளர்த்துப் புதிய — காலப் பொருத்தமுடைய அரசியல் இயக்கமாக மாற்றவில்லை. அதற்கான அனைத்து வாய்ப்புகளும் அதற்கிருந்தன.

பதிலாக அந்தப் பலவீனங்கள் இன்றைய சீரழிவுக்கும் தலைமைப் போட்டிக்கும் அதைக் கொண்டு வந்து விட்டுள்ளது. அதாவது அதைச் சேற்றுக்குள் தள்ளி விட்டுள்ளது. உண்மையில் இப்பொழுது தன்னுடைய மனச்சாட்சியின்படி தமிழரசுக் கட்சி அரசியல் அரங்கிலிருந்தே விலகுவதே தமிழ் மக்களுக்கும் இந்தக் காலத்துக்கும் செய்கின்ற பெரும்பணியாக இருக்கும்.

நல்லதைச் செய்ய முடியாது விட்டால் பரவாயில்லை. நல்லன நிகழ்வதற்கு முட்டுக்கட்டையாக இருக்காது விட்டாலே அது ஒரு பெரிய பணியும் பங்களிப்பும்தான். ஏனென்றால் சரி பிழைகளுக்கு அப்பால் புலிகள் உருவாக்கியளித்த கூட்டமைப்பு என்பதைக் கூட தமிழரசுக் கட்சியினால் தக்க வைக்க முடியவில்லை.

புலிகளுக்குப் பிறகு காலம் அளித்த அருமையான வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழ்ச்சமூகத்தின் சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு அடிப்படைகளைக் கூட அது நிர்மாணம் செய்யவில்லை. ஆனால் அதற்கான கடப்பாடும் பொறுப்பும் அதற்கிருந்தது. அதைச் செய்யாமல் பதிலாக எல்லாவற்றையும் சிதைத்து, இறுதியில் தன்னையே அழிக்கும் நிலைக்கு வந்துள்ளது.

இதற்குத் தனியே தமிழரசுக் கட்சியினர் மட்டும் பொறுப்பில்லை. அதை ஆதரித்தும் அனுசரித்தும் நின்ற, நிற்கின்ற அனைவருக்கும் இந்தப் பொறுப்பும் பழியும் உண்டு. வரலாறு நிச்சயம் இவர்களை நிந்திக்கும்.

இப்பொழுது சிவஞானம் சிறிதரன் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தலைவராகியவுடன் சிறிதரன் சென்றது கிளிநொச்சியில் உள்ள மாவீரர் துயிலுமில்லத்துக்கு. இது ஏற்கனவே கூறப்பட்டுள்ளதைப் போல அவர் தன்னைப் புலிகளின் அரசியல் தொடர்ச்சியாகக் காட்ட முற்பட்டதற்காகவாகும். ஆனால் இதை தென்னிலங்கைச் சக்திகள் நற்சமிக்ஞையாகப் பார்க்கப் போவதில்லை. ஏன் முஸ்லிம்கள் கூட இதை எதிராகவே பார்ப்பார்கள். அவ்வாறே இந்தியாவும் மேற்குலகும் எதிர்நிலை நின்றே நோக்கும்.

புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு (20ம் பக்கம் பார்க்க)



# சுயம் இழந்து புலிகளின் ஒளியில் குளிர் காயும் தமிழ்க்கட்சிகள்!



ஈழத்தமிழர்களின் விடுதலை மட்டும் கேள்விக்குறியாகவில்லை. விடுதலைப் போராட்டம் முறியடிக்கப்பட்டதற்குப் பின்னான (Post – War Politics) அரசியலும் கேள்விக்குறியின் முன்னே தான் நிற்கிறது. காரணம், போருக்குப் பின்னரான அரசியலைத் தமிழ்த்தரப்பு முன்னெடுக்கவில்லை என்பதேயாகும். போருக்குப் பிறகான அரசியல் எது? எப்படியானது? அதை எப்படி முன்னெடுப்பது என்ற தெளிவில்லாமல் அதை முன்னெடுக்கவே முடியாது.

இந்தத் தெளிவைக் கொள்வது மிக முக்கியமானது. அதை விட அந்தத் தெளிவின் அடிப்படையில் துணிந்து அதைப் பின்பற்ற வேண்டியது அவசியமானது. ஏனென்றால் இன்னும் தமிழ் அரசியல் வெளியானது 1960, 1970, 1980 களின் அரசியலிலேயே உள்ளது. இதை தற்போதைய தமிழ் ஊடகங்கள், தமிழ் அரசியற் பத்தியாளர்களின் எழுத்துகள், அரசியற் கட்சிகளின் கொள்கைப் பிரகடனங்கள், தலைவர்களின் அறிவிப்புகளில் தெளிவாகக் காணலாம். ஆகவே இதைக் கடந்து போருக்குப் பிந்திய Post – War Politics அரசியலை முன்னெடுப்பதற்கு தெளிவும் அதை முன்னெடுக்கும் உறுதிப்பாடும் அவசியம்.

அதில்லாத காரணத்தினால் தான் தீவிரவாதம் பேசும் சிவஞானம் சிறிதரன் தமிழரசுக் கட்சிக்குத் தலைவராக முடிந்தது. சிறிதரனும் தமிழரசுக் கட்சியும் சுற்றிச் சுழன்று கொண்டிருப்பது கடும்போக்காளர் கஜேந்திரகுமாரைச் சுற்றி. சிறிதரன் மட்டுமல்ல, சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், விக்கினேஸ்வரன் போன்றோரும் கஜேந்திரகுமாரின் அரசியற் பிரகடனத்துக்குப் பின்னாலேயே ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

அதை விட்டு தாம் வேறு நிரலில் நின்றால் தம்மை மக்கள் நிராகரித்து விடுவார்களோ என்ற அச்சம் இவர்களைப் பாடாய்ப்படுத்துகிறது. மற்றும்படி இவர்கள் எல்லோருக்கும் நன்றாகவே தெரியும், கஜேந்திரகுமாரின் பருப்பு எங்கும் வேகப் போவதில்லை என்று. அப்படித் தெரிந்து கொண்டே அதைத் தொடர்கிறார்கள் என்றால், இவர்களுக்குத் தங்களுடைய அரசியலில், தமிழர்களுக்கான அரசியலில், இந்தக் காலத்துக்கான அரசியலில் நம்பிக்கையும் தெளிவும் இல்லை என்றே அர்த்தமாகும்.

எத்தகைய சவால்கள், நெருக்கடிகள், எதிர்ப்புகள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு துணிந்து நின்று தமது அரசியலை முன்னெடுப்பதே தலைமைகளுக்கும் கட்சிகளுக்கும் அழகு. அதை இழந்தால் அவை தலைமைகளும் இல்லை. கட்சிகளும் இல்லை.

இந்தக் கட்சிகள் மேலும் தடக்குப் படும் இடங்களுண்டு. சரியோ பிழையோ இந்தக் கட்சிகளும் தலைமைகளும் தமக்கென்ற அரசியற் பாரம்பரியத்தைக் கொண்டவை. உதாரணமாக ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்கென்றொரு பாரம்பரியமும் அரசியற் கொள்கையும் உண்டு. அப்படித்தான் தமிழரசுக் கட்சிக்கும் புளொட்டுக்கும். ஆனால் இவற்றிற் சில அதைக் கைவிட்டு விடுதலைப்புலிகளின் ஒளியிலும் சில போது நிழலிலும் தமது அரசியலை மேற்கொள்கின்றன.

இதற்கு மிகக் கிட்டிய உதாரணம், கடந்த வாரம் சிவஞானம் சிறிதரன், தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவானதற்குப் பின்பு, கிளிநொச்சியில் உள்ள கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு தன்னுடைய ஆதரவாளர்களுடன் சென்று வழிபாடு நடத்திக் காட்சிப்படுத்தியதாகும்.

இதையிட்டு கடுமையான விமர்சனங்கள் பொதுவெளியில் எழுந்துள்ளன. பதிலாகச் சில ஆதரவான குரல்களும் அங்கங்கே ஒலிக்கின்றன. ஆனாலும் இதையெல்லாம் கடந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோபக் கனல் எறிப்பதையும் நாம் காணமுடிகிறது. உதாரணமாக,

வலிக்கிறது. கிளிநொச்சி, கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம் அரசியல் மேடையாகப் பயன்படுத்தப்படுகிறது. இதை அனுமதிக்கக் கூடாது என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளியாகச் செயற்பட்டவரும் தற்போது பசுமை ஆக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் 'வன்னித் தமிழ் மக்கள் ஒன்றிய'த்தின் நிறுவனருமான கணபதி சிறிதரன் (தரன்ஸ்ரீ) குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடும் போது, இராணுவத்தின் முற்றுகையில் களத்தில் கழுத்துப் பகுதியில் விழுப்புண் அடைந்து கதைக்க முடியாது. காலில் விழுப்புண் அடைந்து நடக்க முடியாது என்ற நிலையில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அருகில் இருந்த எங்களுக்கு உரித்தான (போராளிகளின்) மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். என்னோடு ஒன்றாகக் களமாடி, காயப்பட்டு நான்கு நாட்கள் கழித்து மரணத்தை அடைந்த நண்பனின் இறுதி நிகழ்வில் அவனுடைய உடலை நானும் சுமந்து விதைக்க வேண்டும் என்று விரும்பினேன்.

நடக்கவே முடியாது. முழுமையாக கதைக்க முடியாது. இருந்தும் இறுதித் தருணத்தில் நண்பனின் வித்துடலுக்கு விடை கொடுப்பதற்காக கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு சென்றேன். ஒன்றாகப் பழகி உணவு அருந்தி அருகில் உறங்கி, களமாடிய நண்பனை விதைப்பதற்காக...

இப்பொழுது ஒவ்வொரு தடவையும் தாய்மண்ணுக்கு செல்லும் போதும் துயிலும் இல்லங்களுக்கு செல்வதற்கு நான் தவறுவதில்லை. இந்த தடவையும் நான்கு துயிலும் இல்லங்களுக்கு சென்றேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் அங்கே நான் புகைப்படங்களை எடுப்பதில்லை. ஆனால் பல ஆயிரம் நினைவுகளை மட்டும் மனதுக்குள் சுமந்து கொள்வேன் ... வலிகளோடு...

இன்று துயிலும் இல்லங்களும் அரசியல் மேடைகளாக மாற்றப்பட்டுள்ளன. அங்கே விடுதலைக்காகப் போராடித் தம்மை அர்ப்பணித்த ஆன்மாக்கள் அமைதியாக உறங்க வேண்டும். அவற்றை அரசியல் நாடகத்தினால் குலைக்கக் கூடாது....என்று தரன்ஸ்ரீ குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கு முன்பு, மாவீரர் நாளொன்றில் பல்வேறு தரப்பினரின் எதிர்ப்பு மற்றும் விமர்சனங்களுக்கு மத்தியில் சிறிதரன் மாவீரர்நாள் சுடரை ஏற்றியிருந்தார். அதற்குப் பின்னர் அவர் அப்படிச் சுடர் ஏற்றக் கூடிய சூழல் அங்கே இருக்கவில்லை. அதற்கு மக்களும் போராளிகளும் இடமளிக்கவில்லை. ஆயினும் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தான் தெரிவு செய்யப்பட்ட பின்னர், அங்கே சென்று வழிபாட்டைச் செய்துள்ளார் சிவஞானம் சிறிதரன்.

இது பல தரப்பிலும் கடுமையான விமர்சனத்தை உண்டாக்கியுள்ளது. இதற்கு முன் புலிகளின் காலத்திலும் சரி பின்னரும் சரி, எந்தச் சந்தர்ப்பத்திலும் இவ்வாறு எந்தவொரு அரசியற் தரப்பும் மாவீரர் துயிலும் இல்லங்களைத் தம்முடைய அரசியல் மேடையாகப் பயன்படுத்தவில்லை என்கின்றனர் அவர்கள்.

மட்டுமல்ல, பேச்சுவார்த்தைக்குச் செல்லும் போதும், போர்க்களத்துக்குச் செல்லும் போதும் கூட மாவீரர் துயிலுமில்லங்களை ஒரு அரசியற் களமாக விடுதலைப் புலிகள் பயன்படுத்தவில்லை. துயிலுமில்லங்களை அவர்கள் உயரிய இடத்தில் வைத்தே நோக்கினர் என்றும் கூறுகிறார்கள். ஆகவே இது தனியே தரன்ஸ்ரீயின் கவலை மட்டுமல்ல, வேறு பலருடைய கவலைகளும்தான்.

2009க்குப் பிறகு, விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள், அவர்களுடைய கொள்கையை, சித்தாந்தத்தை முன்னெடுப்போர், அவற்றின் தொடர்ச்சியாளர்கள் தாமே என்று தம்மைத் தாமே பிரகடனப்படுத்திக் கொண்டு இன்று, தமிழ் அரசியல் வெளியில் அரசியல் நாடகமாடும் போக்கு வரவரக் கூடியிருக்கிறது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸினர் (கஜேந்திரன், கஜேந்திரகுமார் அணி) தொடக்கம், தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறிதரன் வரையில் சிலர் இந்த நாடக அரசியலை எந்தக் கூச்சமுமின்றி மேற்கொள்கின்றனர். புலிகளின் தொடர்ச்சி தாம் என்று சொல்லும் இவர்கள், விடுதலைப் புலிகள் முன்னெடுத்த எந்தவொரு அரசியல் செயற்பாட்டு வடிவத்தையும் தமது அரசியலில் கொண்டிருக்கவில்லை. உதாரணமாக, புலிகள் போராடிக் கொண்டே களத்தில் பெரும் சமராடிக் கொண்டே மறுபக்கத்தில் சமூக வேலைத்திட்டங்களில் ஈடுபட்டனர். சூழலையும் பண்பாட்டையும் பாதுகாத்தனர். பொருளாதாரக் கட்டமைப்புகளை விரிவாக்கம் செய்தனர். பொருளாதாரத் தடைகளின் மத்தியிலும் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொறிமுறையை உருவாக்கிச் செயற்படுத்தினர். சட்ட விரோத மது உற்பத்தி மற்றும் விற்பனையை இல்லாதொழித்தனர். மண்ணகழ்வைத் தடுத்தனர். மொத்தத்தில் ஒரு ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கி வைத்திருந்தனர். ஊழலையும் பொறுப்பின்மையையும் அதிகார துஸ்பிரயோகத்தையும் இல்லையென்றாக்கினர். அவர்கள் உருவாக்கிய காடுகள் பல இடங்களிலும் இன்னும் உண்டு. பல நூற்றுக்கணக்கான ஏக்கரில் மரமுந்திரிகை, வேம்பு போன்ற தோப்புகள் வன்னியில் உள்ளன.

சாதி, மத, பிரதேச வேறுபாடுகளற்ற ஒரு சமத்துவச் சமூகம் அப்போதிருந்தது. இதில் ஒரு சிலவற்றைக் கூட தற்போதைய அரசியற் தரப்புகள் மேற்கொள்ளவில்லை. குறைந்த பட்சம் நான்கு மரக்கன்றுகளைக் கூட நட்டுப் பராமரித்து வளர்க்க முடியாத நிலையில் தான் இவை உள்ளன. காடழிப்பும் மணல் அகழ்வும் சட்டவிரோத மது உற்பத்தியும் மதுப்பாவனையும் கட்டற்று அதிகரித்திருக்கிறது. இவற்றையெல்லாம் வெளியே இருந்து வந்து யாரும் செய்யவில்லை. அவ்வளவும் வடக்கில் நம்முடைய சூழலில் உள்ளோரே செய்கின்றனர். இன்னும் சரியாகச் சொன்னால், இந்தத் தரப்பினரின் ஆதரவாளர்களிற் பலர் இவ்வாறு சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



கிளிநொச்சி, முல்லைத்தீவு, சாவகச்சேரி போன்ற நீதிமன்றங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்களின் உரிமையாளர்களையும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிற மணல் மற்றும் மரங்களையும் கொண்டு வந்தோரையும் ஆராய்ந்தால் அவர்கள் அனைவரும் நம்முடைய சூழலைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். இவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் இருந்து கொண்டே புலிகளின் அரசியலைத் தொடர்வதாகப் பாவ்லா காட்டுகிறார்கள்.

கிழக்கு மாகாணத்தின் நிலை சற்று வேறு. அங்குள்ள சமூகச் சூழலின் அடிப்படையில் சில பாதிப்புகள் ஏற்பட்டிருந்தாலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் நிலவரம் வேறாக இருந்தது. அங்கும் இப்பொழுது மணல் அகழ்வும் சூழல் சிதைப்பும் சாதாரணமாகியுள்ளது.

சரி, இன விடுதலை சார்ந்து புலிகளின் அரசியல் கோரிக்கையோடு பயணிப்பதாக இருந்தாலும் அதை முன்னெடுப்பதற்கான அரசியற் கட்டமைப்போ பொறிமுறையும் இவர்களிடம் கிடையாது. வெறுமனே வாய்ச் சவாடல்களைச் செய்து இலங்கை அரசையும் சிங்கள இனவாதத்தையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியுமா? ஆக அதுவும் பொய்யான நாடகமே!

தவிர, விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்ட பல்லாயிரக்கணக்கான போராளிகள் இன்னும் நிர்க்கதியான நிலையில் தான் வாழ்கின்றனர். மாவீரர் குடும்பங்கள் பலவும் நெருக்கடியான வாழ்க்கையில் உள்ளனர். அவர்களைப் பராமரிப்பதற்கான, அவர்கள் சுயமாக வாழக்கூடிய ஏற்பாடுகளைக் கூட இவர்கள் செய்யவில்லை. அதற்கான எந்தப் பொறிமுறையும் இவர்களிடம் கிடையாது. ஆனால், மேடைகளிலும் பத்திரிகை அறிக்கைகளிலும் புலிகளின் இன்றைய பிரதிநிதிகள் போலத் தம்மைக் காண்பித்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். இதற்காக புலிகள் தரப்பில் போராடி சாவினைத் (22ம் பக்கம் பார்க்க)

# விதியே விதியே தமிழ்ச்சாதியை....

(18ம் பக்கத் தொடர்ச்சி) என்ற பேர் இருந்தாலும் சம்பந்தன் அதனைக் கடந்து பல்வேறு தரப்பினருடைய கவனத்தையும் கோரக் கூடிய அரசியலை முனனெடுத்து வந்தார். இந்த நிலைப்பாடு சர்வதேசப் பரப்பிலும் தமிழ்த் தரப்பின் தலைவர் என்ற அடையாளத்தைச் சம்பந்தனுக்குக் கொடுத்தது, அவர் மேற் கொண்ட பன்மைத்துவத்தை நோக்கிய அரசியலாகும். ஆனால், அதுதான் தமிழ்த் தரப்பில் சம்பந்தனுக்கும் அவரைத் தொடர்ந்த சுமந்திரனுக்கும் எதிரான விமர்சனங்களையும் கடந்த காலத்தில் உருவாக்கியிருந்தது. சுமந்திரன் தலைமைக்கு வர முடியாமல் போனதற்குக் காரணமும் இதுதான்.

ஆனால் போருக்குப் பிந்திய அரசியலை தனியே எதிர்ப்பு அரசியலாக முன்னெடுக்க முடியாது. இன்றைய யதார்த்தம் வேறு. இதைத் தெளிவாகவே சர்வதேச சமூகமும் இந்தியாவும் இலங்கையும் பொதுவாக உலகப் போக்கும் சொல்கின்றன. இப்படியான நிலைக்குப் பிறகும் தமிழ் மக்கள் (இங்கே மக்கள் என்பது அவர்களுக்காகச் சிந்திப்பதாகக் கருதப்படும் ஊடகவியலாளர்கள், அரசியற் பத்தியாளர்கள், தமிழர்களின் கல்விசார் துறையினர், சமூகச் செயற்பாட்டாளர்கள் உள்பட எனப் பொருள்படும) தமிழரசுக் கட்சியை தமக்கான மீட்புப் படகாகக் கருதினால் அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியுள்ளது. அவர்களைக் குறித்தே கேள்வி எழும்புகிறது.

விடுதலைக்காக ஒரு சிறிய மக்கள் கூட்டம் தன்னுடைய சக்திக்கு அப்பால், மாபெரும் தியாகங்களைச் செய்துள்ளது. அளவுக்கு அதிகமான இழப்புகளைச் சந்தித்திருக்கிறது. இந்த இழப்புகள் சாதாரணமாகக் கடந்து போகக் கூடியவையல்ல. மட்டுமல்ல, உள் நாட்டிலும் நாட்டிற்கு வெளியேயும் தொடர் அலைச்சல்களில் சந்தித்த பிறகும் திக்குத் தெரியாத காட்டில் தடுமாறுவதைப்போலிருந்தால்,

ஈழத்தமிழரின் ஊடக, அரசியல், அது சார் அறிவு நிலையைப் பார்த்தால் சிரிப்பு வரும். சற்று ஆழமாகச் சிந்தித்தால் கடுமையான கோபமே ஏற்படும். தங்களுடைய சொந்த அனுபவத்திலிருந்து கூட எதையும் கற்றுக் கொள்ள முடியாத சமூகமாக ஈழத் தமிழர்கள் சீரழிந்துள்ளனர். இல்லையென்றால் நாற்பது ஆண்டுகளாகப் போராடிய பட்டறிவைக் கூட நினைவில் வைத்துப் பரிசீலிக்க முடியாத அளவுக்கு, எல்லாவற்றையும் மறந்து போய், நாற்பது ஆண்டுகளுக்கு முன்னான அரசியல் குழிக்குட் போய்க் கண்மூடித்தனமாக விழுவார்களா?

விதியே விதியே, தமிழ்ச் சாதியை என் செய நினைத்தாய்? என்று பாரதியார் பாடியதை இங்கே நினைவிற் கொண்டு பேச வேண்டியதாக உள்ளது.

பாரதியார் மனம் வருந்தி இதைச் சொன்னது, இந்திய சுதந்திரப் போராட்ட காலத்திலாகும். அப்போது வரலாற்றுச் சிறப்பெல்லாம் இருந்தும் கூட தமிழர்கள் உள்நாட்டிலும் உலகம் முழுவதும் கூலிகளாகவும் ஏதிலிகளாகவும் சிதறிப் பரந்து அல்லலுற்றுக் கிடந்தனர். அதைப் பார்த்து வெம்பித் துயரடைந்தார் பாரதி. கவிஞரின் மனம் சிறுமை கண்டு, கொடுமை கண்டு கொதிப்பதைப்போல, அறியாமையைக் கண்டும் கொதிப்படைவது.

காலம் கடந்தாலும், சூழல் மாறினாலும் ஈழத்தமிழரின் நிலையில் மாற்றமில்லை. வரவர நிலைமை மோசமாகிக் கொண்டே போகிறது.

# இலங்கை இந்திய உறவின் புதிய

(21ம் பக்கத் தொடர்ச்சி) அனைத்தையும் தடுத்து நிறுத்தி விட முடியுமென தென் இலங்கை கணித்துள்ளது.

மூன்றாவது, இலங்கை மீது இந்தியாவின் நடவடிக்கையை கட்டுப்படுத்தும் அதே வேளை இந்தியா மீதும் அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடிய நாடு ஒன்றுடனான உறவை தென் இலங்கை முதன்மையாகக் கருதுகிறது. இந்தியா கருதுவது போல் அல்லாது சீனாவுடனான உறவை தென் இலங்கை அரசியல் உறவாகக் கருதுகிறது. பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை விட அரசியல் முக்கியத்துவம் அதிகம் கொண்டதாகவே தென் இலங்கை சீனாவுடனான உறவை பார்கிறது. அதனை அரசியல் பொருளாதார உறவாக கருதுவதைக் காட்டிலும் அரசியல் உறவாக அணுகுவது இலாபகரமானதாக தென் இலங்கை ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். சீனாவுடனான வர்த்தக உறவை இந்தியாவுக்கு நிகரானதாக தென் இலங்கை கொண்டிருந்தாலும் அதன் மூலம் அரசியல் பலத்தையே வெளிப்படுத்த விரும்பு கிறது. ஏனெனில் இலங்கையின் இருப்பென்பது இந்தியா எதிர்பினால் ஏற்பட்டதாகும். அது தனித்து சீனா பக்கமானதல்ல. அது பாகிஸ்தான சார்ந்ததுமாகவும் உள்ளது.

எனவே இந்தியாவின் வர்த்தக அணுகுமுறையானது இலங்கைத் தீவு முழுவதையும் மையப்படுத்தியது. இலங்கை-இந்திய வர்த்தமானது இரு நாட்டு உறவை பலப்படுத்துவதுடன் இலங்கைத் தீவை செல்வாக்குச் செலுத்தவும் பிற வல்லரசுகள் ஊடுருவாது தடுத்து நிறுத்துவதற்குமான செய்முறையாகவும் தெரிகிறது.

தென் இலங்கையையும் வடக்கையும் இந்தியா சமபங்காளியாக்கும் வாய்ப்பில் பொருளாதார வர்த்தக உறவை கட்டமைக்க முயலுகிறது. அதனையே இலங்கைக் கான இந்தியத் தூதுவரது உரை உணர்த்துகிறது. ஆனால் தென் இலங்கையின் நடைமுறை யதார்த்தம் வேறு ஒரு தடத்தில் இயங்குகிறதைக் கண்டு கொள்ள முடியும். அது வரலாற்றுக் காலம் முதல் இரு நாட்டுக்குமான உறவின் அடிப் படையில் நிலவும் யதார்த்தமாக அமைந்துள்ளது. அதனால் ஏற்பட்டுள்ள பாதுகாப்புச் சார்ந்த நெருக்கடியை இந்தியா எதிர்கொள்வதையும் தூதுவரது உரை வெளிப் படுத்துகிறது.

# விஜயுடன் கூட்டணியா? கொந்தளித்த சீமான்

(4ம் பக்கத் தொடர்ச்சி) பேசுறீங்க. இந்த கேள்வியை எல்லாரும் என்கிட்டயே கேக்குறீங்க. நாங்க ரெண்டு பேரும் அண்ணனும் தம்பியுமா இருப்பது பிரச்சனைன்னா... நாங்க ஒன்னும் செய்ய முடியாது. அவர் கட்சி ஆரம்பிச்சு, கோட்பாட்டை சொல்லி, லட்சியத்தை சொல்லும் போது, ரெண்டு பேருக்கும் உடன்பட்ட கொள்கை, கோட்பாடாக இருந்தால், அதை என் தம்பி தான் முடிவு பண்ண வேண்டும்.

அவர் தனிச்சு நிக்க வேண்டும் என முடிவெடுத் தார்னா அதில் நான் தலையிட முடியாது. இல்லை அண்ணனுடன் துணை நிற்பேன் என்று அவரும் முடிவெடுத்தால் நீங்களும் தலையிட முடியாது. அதனால் அதை இப்போ பேசக் கூடாது என்றார்.



# இலங்கை இந்திய உறவின் புதிய பரிணாமமாகும் வர்த்தக உறவு?

உலகளாவிய முறைமை, (Global System) வர்த்தகத்தால் கட்டமைக்கப்படுகிறது. இன்றைய பொருளாதாரம் வர்த்தகம் மற்றும் சந்தையால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கான உலகம் பல நூற்றாண்டுகளாக கண்டறிந்த வடிவங்களுக்குள்ளால் நகர்ந்து வருகிறது. உலகத்தில் தோன்றிய அனைத்து கருத்தியலும் உலகளாவிய முறைமைக்கு சேவகம் செய்வதாகவே உள்ளது.

உலகளாவிய வர்த்தகத்திற்குள்யேயே நாடுகளுக்கிடையிலான உறவு நிலவுகிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமான உறவில் வர்த்தகம் அதிக முக்கியத்துவத்தை கொண்டதாக மாற ஆரம்பித்துள்ளது. ஏற்கனவே நிலவிய வர்த்தக உறவுகளை இலங்கை தந்திரோபாய ரீதியில் தோற்கடித்துள்ள போதும் இந்தியா தொடர்ச்சியாக வடிவமைக்க முயல்கிறது.

குறிப்பாக இலங்கையின் பொருளாதார நெருக்கடி இந்தியாவுக்கு வர்த்தக ரீதியில் செல்வாக்கு செலுத்துவதற்கு வாய்ப்பினை கொடுத்துள்ளது. விடுதலைப் புலிகளதும் ராஜபக்ஷக்களினதும் வீழ்ச்சிக்கு உலகளாவிய முறைமை அடிப்படையாக இருந்துள்ளது என்பது கண்கூடே தெரிகின்ற விடயமாகும். இக்கட்டுரையும் இந்திய-இலங்கை உறவில் ஏற்பட்டுவரும் மாற்றங்களில் பொருளாதாரம் பெறும் முக்கியத்துவத்தினை தேடுவதாக அமையவுள்ளது.

இலங்கையின் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க கொச்சியிலிருந்து கொழும்பு வரை திரவ எரிவாயு குழாய்த் திட்டத்தை அமைக்கும் பணியை இந்தியா மேற்கொண்டு வருவதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார். இலங்கை -இந்திய இணைப்பு வழித் தடத்தை அமைப்பதற்கான வழி முறைகளை உருவாக்குவதில் இந்தியா பணியாற்றி வருவதாகவும் இலங்கையின் மிகப் பெரும் வர்த்தகப் பங்காளியாக இந்தியா இருப்பதாகவும் அண்மிய ஆண்டுகளில் இலங்கையின் மிகப் பெரும் வெளிநாட்டு முதலீட்டு நாடாக இந்தியா விளங்குவதாகவும் குடியரசு தின விழாவில் உரையாற்றும் போது ஜா தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றி அவர் அங்கு உரையாற்றும் போது, இந்த நிலையில் பாதுகாப்பு விவகாரங்களில் இலங்கையின் ஆதரவுகளையும் ஒத்துழைப்புகளையும் இந்தியா எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உறவு இந்தியாவால் முதன்மைப்படுத்தப்படுகிறது. கடந்த காலத்தில் அத்தகைய வர்த்தக உறவு காணப்பட்ட போதும் தற்போதைய இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் அதிகரித்து வருகிறது. இந்தியா எண்ணெய் எரிவாயு மற்றும் தரைவழி தொடர்புகளை வலுப்படுத்த பாரிய திட்டங்களை வகுத்து அமுல்படுத்தப் போவதாக வெளிப்படுத்தி வருகிறது. அது மட்டுமல்லாது கப்பல் போக்குவரத்தையும் விமானப் போக்குவரத்தையும் வலுப்படுத்தும் நகர்வுகளில் ஈடுபட்டு வருகிறது.

இலங்கைத் தீவின் வடக்கு பிராந்தியத்தை தரை, ஆகாயம் மற்றும் கடல் வழியாக ஒன்றிணைக்க பல்வேறு பொருளாதாரத் திட்டங்களை இந்தியா வகுத்துள்ளது. மன்னார் தீவுடன் இந்தியாவை இணைக்கும் தரைவழிப் பாதை நீண்டகாலத் திட்டமிடலாக அமைந்துள்ளது. அதனை புராணக் கதையுடன் தொடர்புபடுத்தும் ,ந்தியாவின் தற்போதைய பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சி அதனை சாத்தியப்படுத்த பிரயத்தனம் கொண்டுள்ளதாகவே தெரிகிறது. இலங்கையில் வலுவடைந்து வரும் ராமர் கருத்தியல் அத்தகைய தரைவழி தொடர்பை சாத்திப்படுத்த வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது.

மறுபக்கத்தில் கொழும்புடனும் இந்தியா நெருக்கமான வர்த்தக உறவை வலுப்படுத்த முனைகிறது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் தற்போதைய பாரதீய ஜனதாக் கட்சி அரசாங்கம் இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் உதவியது மட்டுமல்லாது தொடர்ச்சியாக இந்திய இலங்கை இணைப்பினை முதன்மைப்படுத்தி வருகிறது. எரிவாயு, பெற்றோலியம், மின்சக்தி என பல விடயங்களில் பிணைப்பை தனதாக்க முயல்கிறது. வடக்கு மாகாணத்துடன்



கொண்டுள்ள தொடர்புடன் மட்டுமல்லாது தென்னிலங்கையுடனும் நெருக்கத்தை சாத்தியப்படுத்த முனைகிறது. சீனா தென்பூகோள நாடுகள் மத்தியில் உட்கட்டமைப்பு காலனியத்தை (Infrastructure Colonialism) மேற்கொள்வது போன்று இலங்கையிலும் அத்தகைய நகர்வுகளை வெற்றிகரமாக்கியுள்ளது. இத்தகைய நிலையிலேயே இந்தியாவின் வர்த்தகத் தொடர்புகள் நெருக்கமடைய முனைகிறது. உட்கட்டமைப்பு காலனியம் win-win ஒத்துழைப்பை கட்டமைத்ததுடன், பழைய பட்டுப்பாதை வர்த்தகத்திற்கு நிகராக புதிய பட்டுப் பாதை வர்த்தகத்தை உருவாக்கியுள்ளது. இதன்மூலம் உலகளாவிய வர்த்தகத்தில் பங்கெடுக்கும் சீனா சந்தையையும் வர்த்தகத்தையும் ஒன்றிணைக்கும் உபாயத்தை வெற்றிகரமானதாக மாற்றியுள்ளது. உலகம் வெற்றி தோல்விக் கோட்பாட்டை கொண்டியங்க சீனா வெற்றி-வெற்றிக் கோட்பாட்டை உலகத்தை வெற்றிகொள்ளும் உபாயமாக பிரயோகித்துக் கொண்டு வருகிறது. இதுவே இ,ந்தியா -சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் ,டையில் இலங்கை பொறுத்த கொள்கையில் காணப்படும் ஏற்ற இறக்கமாகும்.

வர்த்தகமானது நாடுகளது உறவை பிணைப்பதுடன் பொருளாதார பிணைப்பு வலுவான அரசியல் கட்டமைப் புக்கு வழி வகுக்கும் உலகத்தை உருவாக்கியுள்ளது. இதனையே இந்தியா இலங்கைத் தீவில் பின்பற்ற முனைகிறது. அதனையே சந்தோஷ் ஜா வெளிப்படுத்தியுள்ளார். கொழும்பு - கொச்சி உறவுப் பரிமாற்றமானது இரு நாட்டுக்குமான பொருளா. தார உறவை வலுப்படுத்துவதற்கு அப்பால் அரசியல் உறவை.கட்டமைக்கும் கருவியாக திரவ எரிவாயு குழாய் திட்டம் அமையவிருப்பது தெரிகிறது. வடக்குடனும் தெற்குடனும் பொருளாதார உறவையே இந்தியா கட்ட மைத்து வருகிறது. ஆனால் இந்தியாவிடம் தனது பாதுகாப்புக் கொள்கை பொறுத்து நெருக்கடி இலங்கைத்தீவால் உள்ளது என்பதை தூதுவர் ஜாவின் உரை உணர்த்துகிறது. இலங்கைத்தீவு பாதுகாப்புச் சார்ந்து ஆதரவையும் ஒத்துழைப்பையும் இந்தியா எதிர்பார்ப்பதாக வெளிப்படையாக தூதுவர் குறிப்பிட்டுள்ளார் என்பது இந்தியாவின நிலையை உணர்த்துகிறது. இதனை விரிவாக நோக்குவது அவசியமானது.

முதலாவது, இலங்கையின் சந்தையால் இந்தியாவின் பொருளாதாரத்தில் அதிக மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியதல்ல என்பது தெரிந்தவிடயம். ,லங்கையின் மக்கள் தொகை தமிழ் நாட்டைக்க ாட்டிலும் மிகச்சிறியது என்பது அதன் வலிமையை உணர்ந்து கொள்ள முடியும். ஆனாலும் நேரடி முதலீடுகளையும் வர்த்தக நடவடிக்கைகளையும் இந்தியா இலங்கையுடன் மேற்கொண்டு வருகிறது என்பது இந்தியாவின் பொருளாதார வாய்ப்புக்கானதல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் முதலீடுகளும் வர்த்தக நடவடிக்கைகளும் இலங்கையுடனான உறவை பேணுவதேயாகும். ஆதன் மூலம் இலங்கை அரசியலில் ,ந்தியாவின் செல்வாக்கினை வலுப்படுத்த முடியுமென இந்திய அரசாங்கம் கருதுகிறது.

இரண்டாவது, இந்தியாவின் நெருக்கமான பொருளாதார பிணைப்பு சீனா போன்ற நாடுகளது இலங்கையுடனான ஒத்துழைப்பினை தடுத்து நிறுத்துவதாகும். காரணம் சீனாவின் இலங்கைத் தீவுடனான உறவானது பொருளாதார அர்த்தத்திலேயே முதன்மையானது என ,ந்தியா கருதுகிறது. இலங்கைத் தீவுக்கு தேவையான பொருளாதார ஒத்துழைப்பினை வழங்கும் போது இலங்கை சீனாவுடனான உறவை கை விடும் என ,ந்தியா கருதுகிறது. அல்லது கை விட வைக்க முடியுமென்று இந்திய ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள். அதற்கான வாய்ப்பு உள்ளதாகவே இந்திய தரப்பு ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. இந்தியக் கொள்கை வகுப்பாளர்களும் இராஜதந்திரிகளும் அத்தகைய கருத்தினையே அதிகம் பிரதிபலிக்கின்றார்கள்.

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –




இலங்கை ஆட்சியாளர்களும் அதனை ஊக்குவிக்கும் விதத்தில் உரையாடுகின்றனர். இந்தியா பக்கம் இருப்பது போல் காட்டிக் கொள்ள முயலுகின்றனர். ஆனால் இலங்கை -சீன உறவென்பது அடிப்படையில் பொருளாதார ஒத்துழைப்புக்கான உறவு கிடையாது. பொருளாதாரம் என்பது அடம்ஸ்சிமித்தின் காலத்திலிருந்து அரசியல் பொரளாதாரமாக மாறி விட்டது. பொருளாதாரமோ அரசியலோ தனித்தனியானதல்ல. இவை ,ரண்டும் ஒன்றிணைந்து செயல்படும் போது மட்டுமே இலக்கை அடையும் வாய்ப்பினை ஒரு நாடு பெற்றுக் கொள்கிறது. இதனையே சீனாவின் இலங்கையுடனான உறவிலும் பார்க்க முடிகிறது. ,லங்கை ஆட்சியாளரைப் பொறுத்தவரை பொருளாதார வாய்ப்புக்களைக் காட்டிலும் அரசியலே முதன்மையானதாக கொள்கின்றன. சீனாவுடனான உறவினால் அயலிலுள்ள இந்தியாவின் இலங்கை மீதான ஆதிக்கததை கட்டுப்படுத்த முடியுமென கருதும் போக்கு நிலவுகிறது. அல்லது இலங்கை மீதான அழுத்தங்களை தவிர்ப்பதுடன் இந்தியாவின் எல்லைமீறிய அல்லது ஆக்கிரமிப்புக்கான நகர்வுகள்

(20ம் பக்கம் பார்க்க)




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரலாம். குடும்பத்தில் வீண் பிரச்னை ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கை துணையின் செயல்கள் உங்களுக்கு அதிருப்தியை ஏற்படும். பிள்ளைகள் நீங்கள் சொல்வதை கேட்டு நடப்பது ஆறுதலை தரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளுக்கான தடைகள் அகலும்





ரிஷபராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். குடும்பத்தில் சந்தோஷமும் மன நிம்மதியும் இருக்கும். உறவினர்கள், நண்பர்களின் ஆதரவும் கிடைக்கும். நிதானமாக பேசுவது நல்லது.





மிதுனராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மன மகிழ்ச்சி ஏற்பட அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துவது நன்மையை தரும். வழக்கு விவகாரங்களில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் அதிகப்படி வருமானம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான உறவு காணப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபடுவீர்கள். தாய், தந்தையரின் உடல் நிலையில் கவனம் தேவை.




சிம்மராசி அன்பர்களே! தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பூமி வீடு மனையால் லாபம் ஏற்படும். சுபகாரியங்கள் நல்லபடியாக நடக்கும். அடுத்தவர்கள் மூலமாக நடக்க வேண்டிய காரியங்கள் நல்லபடியாக நடக்கும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள்




கன்னிராசி அன்பர்களே! வீண் செலவுகள் குறையும். பண வரத்து அதிகரிக்கும். எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். சொத்துக்களை வாங்கும் போதும், விற்கும்போதும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.





துலாம்ராசி அன்பர்களே! மன திடம் அதிகரிக்கும். சுபச்செலவுகள் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசும் போது கவனம் தேவை. குடும்பாதிபதி சுக்கிரன் ராசியில் இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே சிறு பூசல்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளிடம் நிதானமாக பேசுவது நல்லது. தொழில் ஸ்தானத்தை புதன் பார்ப்பதால் சிறு பிரச்னைகள் தோன்றி மறையும்.





விருச்சிகராசி அன்பர்களே! சுபச் செலவுகள் அதிகமாகும். வீண் பேச்சை குறைப்பது நன்மை தரும். அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தினரது செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். நிதானத்தை கடைபிடிப்பது வீண் பிரச்னை ஏற்படாமல் தடுக்கும். வாழ்க்கை துணை ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நன்மை தரும். எதைப் பற்றியும் விவாதிப்பதை தவிர்ப்பது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! கடும் முயற்சிக்கு பிறகு எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். தொலை தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் அவ்வப்போது ஏதாவது சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு மறையும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியங்களை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம். எதிர்ப்புகள் விலகும். காரிய தடைகள் நீங்கும். வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தடைபட்டிருந்த வீடுப் பணிகள் நிறைவடையும்.




கும்பராசி அன்பர்களே! காரியங்களில் இருந்த சுணக்க நிலை மாறும். முயற்சிகளில் நல்ல பலன் காண்பீர்கள். சகோதரர்கள் வழியில் இருந்த பிரச்னைகள் நீங்கும். குடும்பத்தினரின் செயல்கள் நன்மை அளிக்கக்கூடிய வகையில் இருக்கும். எந்த விஷயத்தையும் கணவன், மனைவிக்கிடையே திட்டமிட்டு செய்வது நன்மை தரும். குழந்தைகள் உங்கள் சொற்படி கேட்டு நடப்பது மனஅமைதியை தரும்.




மீனராசி அன்பர்களே! நீங்கள் செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். சாதுரியமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். அனுபவப்பூர்வமான அறிவுத்திறன் அதிகரிக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் மனம் மகிழும்படியான நிகழ்ச்சி நடக்கும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# சுயம் இழந்து புலிகளின் ஒளியில் குளிர் காயும்...

(19ம் பக்கத் தொடர்ச்சி) தழுவிக் கொண்ட திலீபன் நினைவுநாள் தொடக்கம் புலிகளால் மதிப்பளித்துக் கொண்டாடப்படும் மாவீரர்நாள் வரையிலும் அனைத்தையும் பயன்படுத்திக் கொள்ள விளைகின்றனர்.

இதனுடைய உச்சக் கட்டமாகவே தற்போது தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறிதரனின் துயிலுமில்ல நாடகமும் நடந்தேறியுள்ளது. தம்மால் சுயமாக எதையும் செய்ய முடியாத நிலையில் புலிகளின் அவர்களுடைய மாவீரர்களின் ஒளியில் தங்களுடைய அரசியலை இவர்கள் மேற்கொள்ள விளைகின்றனர். இது அந்தப் போராளிகளுக்கும் அவர்களைப் பெற்று வளர்த்த பெற்றோருக்கும் அவர்களை மதிக்கின்ற மக்களுக்கும் இழைக்கின்ற அநீதியாகும்.

யுத்தத்தின் போது படையினர் ஆக்கிரமித்த பிரதேசங்களில் இருந்த மாவீரர் துயிலுமில்லங்கள் சிதைக்கப்பட்டன. அது மிகமோசமான ஒரு பண்பாட்டுச் சிதைப்பு. அதற்காக எப்போதும் சிங்கள மக்களும் அவர்களுடைய வரலாறும் தலைகுனிய வேண்டும் என்று அப்போது அரசியல் விமர்சகர் மு.திருநாவுக்கரசு குறிப்பிட்டிருந்தார். உண்மையும் அதுதான். என்ன தான் எதிர்த்தரப்பாக இருந்தாலும் எவருடைய புதைகுழிகளையும் நினைவிடங்களையும் சிதைக்கும் உரிமை எவருக்கும் இல்லை. அப்படிச் செய்தால் அதொரு பண்பாட்டு அழிப்பே. நிச்சயமாக அரசியல் பண்பாடு வீழ்ச்சியடையும் இடங்களிலேயே இவ்வாறான செயல்கள் நிகழ்ந்தேறும். ஏறக்குறைய அப்படியான ஒரு பண்பாட்டுச் சிதைப்பே, இப்பொழுது நடந்து கொண்டிருப்பதுமாகும். தமது அரசியல் ஆதாயங்களுக்காக போராளிகளையும் போராட்டத்தில் தம்முடைய இன்னுயிரை ஈய்ந்தோரையும் பயன்படுத்திக் கொள்ளுதல் மிகத் தவறானதாகும். இந்த வியாபாரத்துக்கு மக்களும் இடமளிக்கக் கூடாது. அப்படி இந்த அரசியல் தரப்பினர் தம்மைப் புலிகளின் தொடர்ச்சியாக உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றால், (கவனிக்கவும், உருவாக்கிக் கொள்ளல் அல்ல. உருவகித்தல் என்பதை) புலிகளைப் போலச் செயற்திறனுள்ளவர்களாக மாறிக் கொள்ள வேண்டும். அதைச் செய்யாமல் வாய்ச்சொல் வீரர்களாக இருப்பது பொருத்தமற்றது. அது புலிகளுடைய இயல்புக்கும் அடையாளத்துக்கும் மாறானது. எதிரானது.

(குறிப்பு — இந்தக் கட்டுரை புலிகளை தமது அரசியல் எஜமானர்களாகக் கருதிக் கொண்டு அல்லது புலிகளின் தொடர்ச்சி தாம் என்று உருவகித்துக் கொண்டு செயற்படும் அரசியற் தரப்பினைக் குறித்த விமர்சனங்களுக்காக எழுதப்பட்டது)

# தமிழரசுக்கட்சிக்குள் சுமந்திரனின் தோல்வி

(17ம் பக்கத் தொடர்ச்சி) மூத்த தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் பலர் விரும்பியிருக்கவில்லை. இதனை சிலர் நேரடியாகவே இந்தக் கட்டுரையாளரிடம் கூறியிருக்கின்றனர். சாணக்கியனின் கடந்த காலமே இதற்கான காரணம் அத்துடன் சாணக்கியன் கட்சியின் மூத்த உறுப்பினர்களை மதிப்பதில்லை. தான்தோன்றித்தனமாக நடந்து கொள்கின்றார் என்னும் குற்றச் சாட்டுகள் பரவலாக உண்டு.

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது சுமந்திரன் பிரேரித்த பெண் வேட்பாளர் தொடர்பிலும் சர்ச்சைகள் எழுந்தன. இந்த விடயங்களை கருத்தில் கொண்டு சிந்தித்தவர்கள், ஒருவேளை சுமந்திரன் கட்சியின் தலைவரானால் தங்களில் பலர் கட்சிக்குள் இருக்க முடியாமல் போகலாம் என்று அச்சமடைந்தனர். தங்களின் அச்சத்தை தமிழ்தேசிய அரசியலாக்கினர். இதன் விளைவாகவே கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறையில் பெருமளவானோர் சுமந்திரனின் தோல்வியை விரும்பினர்.

இந்த விடயங்களை சிறிதரன் நன்கு பயன்படுத்திக் கொண்டார். கிழக்கு மாகாணத்தில் தன் மீதுள்ள அதிருப்தியை சுமந்திரன் துல்லியமாக மதிப்பிடவில்லை. மாறாக தான் ஒரு தவிர்க்க முடியாத தெரிவென்பதால், அவர்கள் வேறு வழியில் சிந்திக்க வாய்ப்பில்லை என்னும் கணிப்பிலேயே சுமந்திரன் ஓய்வாக இருந்திருக்கின்றார்.

மூன்றாவது, சுமந்திரன் தொடர்பில் தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட்டு வந்த குற்றச்சாட்டுகள். சுமந்திரன் தனக்குள்ள இராஜதந்திர தொடர்புகளை தவறாக பயன்படுத்துவதாகவும் தமிழ் மக்களின் நீதியை பெறும் முயற்சிகளை பலவீனப்படுத்துவதாகவும் தொடர்ச்சியாக சிலர் குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகின்றனர்.

வடக்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குழுவினர் இவ்வாறான குற்றச் சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர். புலம்பெயர் சூழலிலுள்ள பல அமைப்புகளும் இவ்வாறான குற்றச் சாட்டுகளை முன்வைத்து வருகின்றன. இனப்படுகொலை விவகாரத்தை சுமந்திரன் மழுங்கடிப்பதாகவும் கூட குற்றச்சாட்டுகள் உண்டு.

இறுதியாக சுமந்திரன் கனடாவிற்கு சென்ற போது அங்கு சுமந்திரனுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தை நடத்த முடியாதளவிற்கு குழப்பங்கள் விளைவிக்கப்பட்டன. இவ்வாறான விடயங்கள் சுமந்திரன் மீதான குற்றச்சாட்டுக்கு வலுச் சேர்த்தன. இந்த விடயங்களை புரிந்து கொண்டு சிந்திப்பவர்கள் மிகவும் குறைவு.

ஏனெனில் சர்வதேச அரசியல் அறிவு தமிழ்ச் சூழலில் மிகவும் மந்தமானது. அரசியல் கட்சிகள் மத்தியில் இருப்பவர்களுக்கே இந்த விடயங்கள் பற்றி போதிய விளக்கமில்லை. சுமந்திரன் என்னும் ஒரு தனிநபர் சர்வதேச முடிவுகளை மாற்றியமைக்க முடியாது.

ஆனாலும் சாமானியர்கள் அவ்வாறு எண்ணிக் கொள்வதற்கான அரசியல் சூழலை சுமந்திரனுக்கு எதிரானவர்கள் தோற்றுவித்தனர். இந்த விடயத்தில் சுமந்திரன் பக்கத்திலும் தவறுண்டு. சுமந்திரன் ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் பேரவை மற்றும் இராஜதந்திர விடயங்கள கையாளும் போது பங்காளிச் கட்சி களின் தலைவர்களையும் இணைத்துக் கொண்டு செயற்பட்டிருக்க வேண்டும்.

அந்தக் காலத்தில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கூட, இது தொடர்பில் தங்களின் அதிருப்திகளை தெரிவித்திருக்கின்றனர். தங்களுடன் சுமந்திரன் இது தொடர்பில் பேசுவதில்லை என்றவாறு அவர்கள் அதிருப்திப்பட்டுக் கொள்வதுண்டு. சுமந்திரன் அவர்கள் அனைவருடனும் இணைந்து, இந்த விடயங்களை முன்னெடுத்திருந்தால், சுமந்திரன் தனியாக இலக்கு வைக்கப்படுவதற்கான வாய்ப்பில்லாமல் போயிருக்கலாம்.

தமிழரசுக் கட்சிக்குள்ளும் சுமந்திரன் எவருடனும் விடயங்களை கலந்துரையாடுவதில்லை என்னும் குற்றச்சாட்டுகள் இருந்தது. கட்சியின் தலைவராக வருவதற்கான இலக்கை கொண்டிருந்த சுமந்திரன், கட்சிக்குள் அனைவரையும் அரவணைக்கும் ஒருவராக இருந்திருக்க வேண்டும்.

சுமந்திரன் தன்னை தவிர்க்க முடியா தவராக யோசித்துக் கொண்டிருந்த போது, சுமந்திரனை தவிர்ப்பதற்கான காரணங்கள் தொடர்பிலேயே மற்றவர்கள் யோசித்துக் கொண்டிருந்திருக்கின்றனர்.

அதற்கான வாய்ப்பு கிடைத்த போது, அதனை பலரும் பயன் படுத்திக் கொண்டனர். இதன் காரணமாகவே வெல்வார் என்று எதிர்பார்க்கப் பட்ட சுமந்திரன் தோல்வியடைந்து, சுமந்திரனோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான எந்தவொரு காரணத்தையும் கொண்டிராத சிறிதரன் வெற்றி பெற்றிருக்கின்றார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

---

# Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com














# தமிழரசையும் இணைத்துக் கொண்டு பொதுச்சின்னத்தில் ஒன்றாகப் பயணிப்போம் என ஸ்ரீதரனுக்கு செல்வம் பதில்!



தமிழரசுக் கட்சியையும் இணைத்துக் கொண்டு பொதுச்சின்னத்தில் நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு எந்த விட்டுக் கொடுப்பையும் மேற்கொள்ள நாங்கள் தயாராக உள்ளோம் என ரெலோ தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் கடந்த 03 பெப் 2024 சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் 5 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஓரணியில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். பொதுச் சின்னமான குத்துவிளக்கு சின்னத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

ஏற்கனவே நாங்கள் தமிழரசுக்கட்சியின் தனிச் சின்னத்தில் பயணித்தோம். பல வருடங்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் பயணித்தோம்.

உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிட வேண்டும் என்று அவர்கள் வெளியில் சென்றதன் காரணமாக நாங்கள் ஒன்றாக நிற்க வேண்டும் என்ற காரணத்தினால் நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுகின்றோம்.

எங்களை பொறுத்தவரை அனைவரும் பொதுச் சின்னம் ஒன்றில் பயணிக்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறிதரனின் கூற்றை நான் வரவேற்கின்றேன். ஒரு பொதுச் சின்னத்தில் நாங்கள் அனைவரும் அணி திரள்வோம். பொதுச் சின்னத்திற்கு வீட்டுச் சின்னம் கூட மாற்றப்பட்டால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. தனிப்பட்ட கட்சிக்குள் கூட்டாக இருப்பது நன்றாக அமையாது. பொதுச் சின்னத்தில் நாங்கள் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு எந்த விட்டுக் கொடுப்பையும் விட்டுக் கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம் என்றார்.

# ஈழத்தை அழிக்கச் செய்யப்பட்ட உலக அரசியல் பேசப்படவில்லை தி.மு.க.வை குறை சொல்லிப் பயன் இல்லை - திருமா தெரிவிப்பு

தமிழீழம் அழிந்ததற்கு தி. மு. கவை மட்டும் குறை கூறுகிறார்கள் ஆனால், உலகளவில் ஈழத்தை அழிக்க செய்யப்பட்ட அரசியலைப் பற்றி யாரும் பேசவில்லை என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார். அத்துடன், இந்தியாவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஒரு போராட்டம்கூட நடைபெறவில்லை. உலக நாடுகள் ஈழத் தமிழர்களைப் பயங்கரவாதிகள் எனத் திரும்ப திரும்ப குறை கூறியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். சென்னையில் தியாகராயர் மண்டபத்தில் நடைபெற்ற ஈழம் குறித்த நிகழ்வில் விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் பங்கேற்று பேசியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார். ஈழத் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமைக்குக் காரணம் கருணாநிதி மற்றும் தி. மு க.தான் என்று கூறினால் அது அரசியல்வாதி களுக்கு வேண்டுமானால் பயன் தரலாம். ஆனால் ஈழத்தமிழர்களுக்கு எப்போதும் பயன் தராது. தமிழீழம் அழிந்ததற்கு தமிழ்நாட்டில் உள்ளவர்கள் தி. மு. கவையும் கருணாநிதியை மட்டுமே குறை கூறினார்கள். ஆனால், உலகளவில் ஈழத்தை அழிக்கச் செய்யப்பட்ட அரசியலைப் பற்றி யாரும் பேசவில்லை. இந்தியாவில் ஈழத் தமிழர் களுக்கு ஆதரவாக ஒரு போராட்டம் கூட நடை பெறவில்லை என்றார்.